விலை ரூபா: 15.00

பொதுசன நூலகம்
நாவாந்துறைப் பணிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஐப்பசி 08 வெள்ளிக்கிழமை (24.10.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 310

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES at RENEWAL
CALL :- 222 5908/222 8812


# தனித் தமிழ்நாடு கோரியதால் வைகோ கைது செய்யப்பட்டார்

## 6ஆம் திகதிவரை விளக்கமறியலில்

(சென்னை)

இந்தியாவில் இருந்து தமிழ்நாடு பிரிந்து தனிநாடாக அமையும் என்கிற பிரிவினை வாதத்தை தூண்டியதாக குற்றஞ்சாட்டப்பட்டு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் வைகோவும், அக்கட்சியின் அவைத் தலைவர் மு.கண்ணப்பனும் நேற்று கைது செய்யப்பட்டனர்.

வைகோ சென்னையில் அவரது இல்லத்தில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். நீதிபதி ரவி அவரை எதிர்வரும் நவம்பர் 6ஆம் திகதிவரை நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைத்து உத்தரவிட்டார்.பின்னர் வைகோ புழல் சிறையில் அடைக்கப்பட்டார். (10 ஆம் பக்கம் பார்க்க)



## இந்தியாவுக்குச் செல்லும் விசேட குழுவில் தமிழ் அமைச்சர்கள், எம்.பிக்கள் இல்லை

### அமைச்சர் றோகித தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை விவகாரம் தொடர்பில் இந்தியப் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்குடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக ஜனாதிபதியின் விசேட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ எம்.பி தலைமையிலான குழு இம்மாதம் 26ஆம் திகதி இந்தியாவுக்கு செல்லும் என்றும் ஆனால் அக்குழுவில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் துணைத் தூதரகம் மீது சட்ட மாணவர்கள் தாக்குதல்

(சென்னை)

சென்னையிலுள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தை தமிழக மாணவர்கள் முற்றுகையிட்டு நேற்று தாக்குதல் நடத்தினர். இதனையடுத்து அங்கு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈழத்தமிழர்கள் மீதான இலங்கை அரசின் படுகொலையைக் கண்டித்து சென்னையிலுள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தை முற்றுகையிட சட்டக்கல்லூரி மாணவர்கள் முடிவு செய்திருந்தனர்.

இதனைத் (10 ஆம் பக்கம் பாக்க)

# யாழில் நேற்று பூரண ஹர்த்தால் இயல்புநிலை முற்றாகப் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட ஹர்த்தால் காரணமாக குடாநாடு உட்பட அனைத்துப் பகுதிகளிலும் மக்கள் நடமாட்டம் இன்றி வெறிச்சோடிக் காணப்பட்டது.

அரச திணைக்களங்கள், வங்கிகள் மற்றும் பாடசாலைகள் எவையும் இயங்கவில்லை.வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

சந்தைகள் அனைத்தும் சனநடமாட்டமின்றி காணப்பட்டது. தனியார் மற்றும் வட பிராந்தியப் போக்குவரத்துச் சபையின் சேவைகள் எவையும் நேற்று மேற்கொள்ளப் படவில்லை.

காங்கேசன்துறைக் கடற்பரப்பில் வைத்து சரக்குக் கப்பல்கள் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்புத் (10 ஆம் பக்கம் பார்க்க)



## கருணாநிதிக்கு எதிராக மதவாச்சியில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

தமிழ்நாடு முதலமைச்சர் மு.கருணாநிதி புலிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்து மதவாச்சியில் நேற்று ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது.

அப்பகுதி மக்கள் கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் கருணாநிதிக்கு எதிராக கோஷம் எழுப்பப்பட்டது.

இந்தியப் பிரதமருக்கோ, தமிழ்நாடு முதலமைச்சருக்கோ இலங்கை விவகாரத்தில் தலையிடவேண்டிய அவசியம் இல்லை என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறினர். (ச-5)

## ஆயுதம் ஏந்திப் போராடுவேன் என்று சொன்னதில் மாற்றுக்கருத்து இல்லை

### கைதுக்குப் பின் வைகோ தெரிவிப்பு

(சென்னை)

ஈழத்தமிழர்களுக்கு எதிராக மத்திய அரசு ஆயுதங்கள் வழங்கி வருவதால் தேவைப்பட்டால் ஈழத்தமிழ் மக்களுக்கு ஆதரவாக கையில் ஆயுதம் ஏந்திப் போராடுவேன் என்றுதான் சொன்னேன். இதில் மாற்றுக்கருத்து இல்லை என்று சென்னையில் நேற்று கைது செய்யப்பட்ட ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அறிவித்துள்ளார்.

தமிழகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பின் ஊடகவியலாளர்களிடம் வைகோ பேசியதாவது, (10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்துக்கு அகதிகள் வருவதை இந்திய அரசு விரும்பவில்லை

### இந். வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு

(சென்னை)

இலங்கையில் இருந்து தமிழகத்துக்கு அகதிகள் வருவதை இந்திய அரசு விரும்பவில்லை என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கையால் தீர்வு சாத்தியமல்ல, பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணமுடியும். எனவே அமைதிப் பேச்சுவார்த்தையை மீண்டும் செயற்படுத்த இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் (10ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பிராந்தியத் தலைவரை வரவேற்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

லயன்ஸ் கழக பிராந்தியத் தலைவர் லயன் சி.சுந்தரேஸ்வரனை வரவேற்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு இணுவில் பிரதேச லயன்ஸ் கழகத்தலைவர் இ.இலகுநாதனின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் போது ஐக்கிய நாடுகள் தினம் குறித்து பீடாதிபதி லயன் தேவராஜா உரையாற்றவுள்ளார். (ச)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உலக வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடைபெறும் நிகழ்வுகளில் ஒன்றாக நல்லூர் பொது நூலகத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கற்றலும் மீள்ஞாபக மூட்டலும் எனும் தலைப்பில் டாக்டர் இ.சிவசங்கர் கருத்துரை வழங்கவுள்ளார்.

நேற்று நடைபெறவிருந்த இக்கருத்தரங்கு தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ச-3)

## அம்பாறையில் மோதல் 2 இராணுவத்தினர் பலி

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள வக்குமுட்டியா பகுதியில் இராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற நேரடி மோதலில் இராணுவத்தினர் இருவர் கொல்லப்பட்டுள்ளனர். ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்று முற்பகல் 11.05 மணியளவில் மோதல் இடம்பெற்றுள்ளது. இதில் இராணுவத்தைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டனர். ஒருவர் காயமடைந்தார் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். (ச-5)

# நாட்டில் நாளாந்தம் 150 வீதி விபத்துக்கள்

(கொழும்பு)

இலங்கையில் நாளாந்தம் 150 வீதி விபத்துக்கள் வீதம் இடம்பெறுவதுடன் ஒவ்வொரு நாளும் 5 அல்லது 6 பேர் கொல்லப்படுவதாகவும் நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகரித்திருக்கும் வீதி விபத்துக்கள் குறித்து ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழு இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

1977 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் வீதி விபத்துக்கள் காரணமாக 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டிருப்பதாகத் தெரிவுக் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் காலப் பகுதியில் வீதி விபத்துக்கள் தொடர்பாக 12 இலட்சத்து 20 ஆயிரத்து 848 சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டும் 37 ஆயிரம் பேர் காயமடைந்தும் இருப்பதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீதி விபத்துக்களால் ஒரு மில்லியன் வாகனங்கள் சேதமடைந்திருப்பதை அந்தத் தெரிவுக் குழு கண்டறிந்துள்ளது. கடந்த 10 வருட காலத்தில் இடம்பெற்ற வீதி விபத்துக்களால் 100 மில்லியன் ரூபாய் செலவு ஏற்பட்டிருப்பதாக நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகரப் பகுதியில் காணப்படும் வீதிகளின் அமைவிடம், வெள்ளம் உள்ளிட்ட காரணங்களாலேயே பெருமளவான வீதி விபத்துக்கள் இடம்பெற்றிருப்பதாகவும் பெரும் எண்ணிக்கையான வாகனங்களைச் செலுத்துவதற்குப் போதுமான இடம் இல்லாமை போன்றவையும் வீதி விபத்துக்களுக்கான காரணங்களாகக் கண்டறியப்பட்டுள்ளன. (ச-5)

## அதிபர் சேவை தரம் 2-II பதவிக்கு அடுத்த மாதம் நேர்முகப்பரீட்சை

இலங்கை அதிபர் சேவை தரம் 2-II இற்கு இணைக்கப்படவுள்ளவர்களுக்கான தகைமைச்சான்றிதழ்கள் பரிசோதிக்கும் நேர்முகப் பரீட்சையை அடுத்த மாத முற்பகுதியில் நடத்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சின் கல்வி நிர்வாக சேவை மேலதிக செயலாளர் எஸ்.முகமெட் தம்பி தெரிவித்தார்.

இதனடிப்படையில் போட்டிப் பரீட்சை மாகாண கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பிரகாரம் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் அடிப்படையில் இந் நேர்முகப்பரீட்சை நடாத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந் நேர்முகப் பரீட்சையின்போது அழைக்கப்பட்டவர்களின் தகைமைச் சான்றிதழ்கள் பரிசோதிக்கப்படவுள்ளதாகக் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் குறிப்பிட்டார். (ச-5)

## சீமெந்து விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் ஆலயப் புனருத்தாரண வேலைகளுக்காக 2008ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட காசோலைகளைப் பெற்றவர்கள் சீமெந்து பெற்றுக்கொள்வது தொடர்பாக மேலதிக அரசாங்க அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க தொழில்நுட்ப உத்தியோகத்தர், பிரதேச செயலருடைய சிபார்சுடன் எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்பாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கச்சேரியில் தங்களது சிபார்சு கடிதத்தினை சமர்ப்பித்து பதிவினை மேற்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட இணைப்பாளர் க.தேவேந்திரன் தெரிவித்துள்ளார். (ச)

## வலிகாமம் கல்விவலய ஆரம்பப் பிரிவு விளையாட்டுப் போட்டி

(மருதனார்மடம்)


வலிகாமம் கல்வி வலய ஆரம்பப் பிரிவு பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி இன்று உடுவில் மகளிர் கல்லூரி மைதானத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விளையாட்டுப்போட்டிக்கு பிரதம விருந்தினராக தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் முன்னாள் அதிபர் பொ.சுந்தரலிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இதேவேளை மேற்படி விளையாட்டுப் போட்டி நேற்று நடைபெறவிருந்தபோதும் ஹர்த்தால் காரணமாக இன்று நடைபெறவுள்ளதாக வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் மு.நடராஜா தெரிவித்தார். (ச-5)

# பயங்கரவாதப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பதே நோக்கம்

## ஜனாதிபதி மகிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டின் பயங்கரவாதப் பிரச்சினையை எதிர்காலச் சந்ததியினருக்கு விட்டுச் செல்வதற்கு நான் தயாரில்லை. அதற்கு முற்றுப் புள்ளி வைப்பதே எனது நோக்கமாகும்.

ஒரு இனத்துக்கோ, மதத்துக்கோ எதிராக யுத்தம் செய்யவில்லை. நாட்டைப் பிரித்து இனங்களுக்கிடையே மோதல்களை ஏற்படுத்த முனையும் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காகவே படை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தெயட்ட கிருள (தேசத்துக்கு மகுடம்) கண்காட்சியையொட்டி நடத்தப்பட்ட சித்திரம், பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் வைபவம் நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்றபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இன்று நாம் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் தொடர்பில் மக்களுக்குப் புதிதாகத் தெளிவுபடுத்த வேண்டிய அவசியம் இல்லை. நாட்டைப் பிரித்து மக்களிடையே பிரச்சினைகளையும் மோதல்களையும் உருவாக்குவதன் மூலம் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது.

இனவாத, மதவாதக் கலவரங்கள் இருக்குமானால் நாட்டை அபிவிருத்தி செய்வதால் பலன் கிடைக்காது. நாடு பிளவுபடுவதைத் தடுத்து, பயங்கரவாதத்தை அடக்கி, நாட்டில் அனைத்து இன, மத மக்களும் அச்சம் இன்றி சுதந்திரமாக வாழும் சூழலை ஏற்படுத்தவே அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம். இது எமது கடப்பாடாகும்.

நாம் இன்று முகம் கொடுக்கும் பிரச்சினையை உங்களிடம் கையளித்து விட்டுச் செல்லத் தயாரில்லை. பயங்கரவாதத்திலிருந்தும் பிரிவினைவாதத்திலிருந்தும் விடுதலை பெற்ற நாட்டையே உங்களிடம் கையளிக்க வேண்டும் என ஜனாதிபதி மேலும் கூறினார். (ச-5)

## கருணா - விமல் வீரவன்ச இருவரும் விசேட சந்திப்பு

(கொழும்பு)

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் தலைவர் கருணாவுக்கும் ஜே.என்.பியின் தலைவர் விமல் வீரவன்சவுக்கும் இடையில் நேற்று விசேட சந்திப்பொன்று நடைபெற்றது.

பத்திரமுல்லவில் அமைந்துள்ள ஜே.என்.பியின் தலைமைச் செயலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளை இல்லாது ஒழித்தால் மட்டுமே நாட்டின் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக் கொள்ள முடியும் என இச் சந்திப்பின் போது கருணா தெரிவித்தார். (ச-5)

## கலைஞர்-பாரதிராஜா திடீர் சந்திப்பு


(சென்னை)

தமிழக முதல்வர் கருணாநிதியை இயக்குநர் பாரதிராஜா சந்தித்தப் பேசினார். இலங்கைத் தமிழர் படுகொலையைக் கண்டித்து இராமேஸ்வரத்தில் திரையுலகத்தினர் நடத்திய பேரணி மற்றும் கூட்டத்தில் திரைப்பட இயக்குநர் சீமானும் அமீரும் இலங்கை அரசுக்குக் கடும் கண்டனம் தெரிவித்தும் இந்திய அரசின் செயல்களை விமர்சனம் செய்தும் பேசினர்.

இவர்களின் பேச்சு சட்ட விரோதம். இவர்களைக் கைது செய்ய வேண்டும் என பல்வேறு கட்சியினர் வலியுறுத்தி வந்தனர். இந் நிலையில் இந்திய இறையாண்மையைச் சிதைக்கும் வகையில் பேசியதாக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோவும் அவைத் தலைவர் கண்ணப்பனும் கைது செய்யப்பட்டனர்.

இச் செய்தி பரவியதும் இயக்குநர் சீமானையும் அமீரையும் பொலிஸார் கைது செய்யப் போகின்றனர் என்ற தகவல் பரவியது. இந்நிலையில் திரைப்பட இயக்குநர் பாரதிராஜாவும் ஆர்.கே.செல்வமணியும் தமிழக முதல்வரை சி.ஐ.டி. நகரில் உள்ள அவரது வீட்டில் சந்தித்துப் பேசினர்.

இது குறித்துப் பாரதிராஜா, ஆர்.கே. செல்வமணியிடம் கேட்டதற்கு, ஒரு விழா தொடர்பாக முதல்வரைச் சந்தித்தோம் எனக் கூறினர். (ச-5)




கரவெட்டி பிரதேச செயலக முதியோர் தின விழாவையொட்டி கரவெட்டியில் நடைபெற்ற முதியோருக்கான இலவச நடமாடும் வைத்திய முகாமை பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் மங்கல விளக்கேற்றி ஆரம்பிப்பதையும் பருத்தித்துறை பதில் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி எஸ்.பிரேமானந் அருகில் நிற்பதையும் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை வைத்தியகலாநிதி டயான் சொய்சா முதியோர்களைப் பார்வையிடுவதையும் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அதிபர் எம்.சிவசிதம்பரம் பார்வை குறைந்த ஒருவருக்கு இலவச மூக்குக் கண்ணாடியை அளிப்பதையும் படங்களில் காணலாம்.

# இன்று ஒரு தகவல்

## கவிதையில் தெரியும் காட்சி

நாம் யார்? நம்முடைய தகுதி என்ன? என்ற நினைப்பு நமக்கு எப்பொழுதும் இருக்க வேண்டும்.

தகுதிக்கு மீறிய நினைப்பு பல சமயங்களில் நம்மை சிக்கலில் கொண்டு போய் விட்டு விடும்.

ஒரு பூனை இருந்தது.

அது தன்னை ஒரு புலியென்று நினைத்துக் கொண்டிருந்தது. தன்னைப் பற்றிய தகுதிக்கு மீறிய நினைப்பில் அந்தப் பூனை நடந்து போய்க்கொண்டிருந்தது.

அப்பொழுது வழியில் ஒரு பெரிய யானை அமைதியாக நின்று கொண்டிருந்தது.

அந்த யானை பொறுமையாக நின்று கொண்டிருந்ததால் இந்த பூனைக்கு அதனிடம் போய் வாலாட்டிப் பார்க்கலாம் என்று ஒரு ஆசை.

உலக இயல்பு தானே இது!

இந்த பூனை யானையின் பக்கமாக போய் அதை சுற்றி சுற்றி வந்தது. உற்றுப் பார்த்தது. வாய் துறு துறுத்தது. வம்பு வளக்க ஆரம்பித்தது.

"எல்லோருக்கும் ஒரு பக்கம் தான் வால் இருக்கும் ஆனால் உனக்கு என்ன இப்படி இரண்டு பக்கமும் வால் இருக்கிறது" என்றது.

இருந்தாலும் யானை பொறுமையாக பதில் சொன்னது.

"அப்படியில்லை! பின்னால் இருக்கிறது தான் வால். முன்னால் இருப்பது தும்பிக்கை!" என்றது.

பூனை விடுவதாக இல்லை.

"அது சரி! தும்பிக்கை ஏன் அப்படி உருண்டையாக இருக்கிறது? அது எதற்காக ?" என்றது.

இதற்கும் அந்த யானை பொறுமையாக பதில் கூறியது. "ஊற்றில் இருக்கும் தண்ணியை உறிஞ்சி குடிப்பதற்காகத் தான் அப்படி இருக்கிறது!" என்றது யானை.

"சரி எல்லோருக்கும் பல் வாய்க்குள்ளே தானே இரு க்கும் உனக்கு என்ன வெளியில் இருக்கிறது! அதுவுமில்லாமல் பெரிதாகவும் நீளமாகவும் இருக்கிறதே?" என்று கேட்டது பூனை.

"புலி என்னிடம் வந்து வாலாட்டினால் அந்த சமயத்தில் அதைத் தாக்குவதற்காகத்தான் இப்படி இருக்கிறது!" என் றது யானை.

இதைக் கேட்டதும் பூனை விழுந்து விழுந்து சிரித்தது.

"மலை எங்கேயாவது பாயுமா? நீயோ கறுப்பாக இருக் கும் பெரிய மலை உன்னால் எப்படி பாய முடியும்? அது முடியாத காரியம்!" என்று சொல்லி விட்டு மீண்டும் சிரித்தது.

என் உடம்பைப் பார்த்து விட்டு தானே மலையென்று சொல்கிறாய்! நான் பாய வேண்டிய அவசியம் இல்லை! இப்பொழுது உன்னை பாய வைக்கிறேன் பார் ! என்று சொல்லி விட்டுஅந்தப் பூனையை அலட்சியமாக தூக்கி எறிந்தது யானை!

எங்கேயோ போய் விழுந்த அந்தப் பூனை மெதுவாக எழும்பி நின்று பார்த்தது. தூரத்தில் அந்த யானை இன்னும் பொறுமையாக ஆனால் கம்பீரமாக நின்று கொண்டிருந்தது.

இப்பொழுது தான்அந்த பூனைக்கு ஞானோதயம் பிறந்தது.

"யானை பாய வேண்டிய அவசியமில்லை! அதற்கு நீள மாக தும்பிக்கை இருக்கிறது!" என்பதைப் புரிந்து கொண் டது.

" வலியாரிடம் வாயாடக்கூடாது" என்ற பாடத்தை பூனை கற்றுக் கொண்டது. இந்தக் காட்சி பாவேந்தர் பாரதிதாசன் கை வண்ணத்தில் ஒரு கவிதையாக உருவெடுத்து வருகிறது.

"இரண்டு பக்கமும் வாலா என்றது பூனை.
எதிரி லேதும் பிக்கை என்றது யானை.
உருண்ட துதிக்கை ஏனோ என்றது பூனை.
ஊற்று நீரை உறிஞ்ச என்றது யானை.
திரண்டு நீண்ட பல் ஏன் என்றது பூனை.
சீறும் புலியைத் தாக்க என்றது யானை.
இருண்ட மலை பாயா தென்றது பூனை.
எடுத்தெ றிந்தது பூனையைப் போய் யானை!"

இந்தக் கவிதையில் ஒரு பாடமும் இருக்கிறது, ஒரு படமும் இருக்கிறது. அதாவது இதைப் படிக்கவும் முடிகிறது, பார்க் கவும் முடிகிறது. வலியாரிடம் வாயாட்டக் கூடாது என்பதை சிறியவர்கள் மட்டுமல்ல பெரியவர்களும் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஒருவன் அப்படித்தான் ஆற்றங்கரையில் பொறுமையாக உட்கார்ந்திருந்த இன்னொருவன் தலையில் போய்க் குட்டினான். அவன் பார்த்தான். உடனே ஒரு ரூபாயை எடுத்து இவன் கையில் கொடுத்தான்.

அவன் சொன்னான் இந்த ஊரில் இப்படி ஒரு வழக்கம் . யார் குட்டினாலும் ஒரு குட்டுக்கு ஒரு ரூபாய் கொடுப்பார்கள் என்று பொறுமையாக சொன்னான்.

இவனுக்கு மிகுந்த ஆசை. உடனே ஊருக்குள் ஓடி னான். கொஞ்ச நேரம் கழித்து திரும்பி அவனிடம் ஓடி வந்தான்.

" உங்கள் பேச்சைக் கேட்டு ஊருக்குள்ளே போய் ஒரு பெரிய ஆசாமி தலையில் ஒரு குட்டு குட்டினேன். ஆனால் அவன் உடனே என்னிடம் இருந்ததை எடுத்து என் கையிலேயே கொடுத்து விட்டான்!" என்றான்.

"என்ன பணமா?" என்றான் அவன்.

"இல்லை! பல்லு!" என்றான் இவன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கடும் மழை பெய்து வருவதால் இடம் பெயர்ந்த மக்கள் அவலம்

## முல்லை அரச அதிபர் கவலை

(முல்லைத்தீவு)

முல்லைத் தீவு மாவட்டத்தில் மழை கடுமையாக பெய்து வருவதன் காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் சொல்லெணாத் துயர்களை அனுபவித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த மக்களுக்கு குடியிருப்பு வசதிகள், குடிநீர் வசதிகள், மற்றும் சுகாதார வசதிகள் அவசரமாக செய்து கொடுக்க வேண்டியுள்ளதாக முல்லைத் தீவு மாவட்ட அரச அதிபர் இமல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

மழை காரணமாக மலேரியா நோய் பரவும் அபாயம் நிலவுவதாக அவர் குறிப்பிட்டார். முல்லைத்தீவின் தற்போதய நிலமைகள் குறித்து அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் 43 ஆயிரத்து 991 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 73 ஆயிரத்து 853 பேர் இடம் பெயர்ந்து வாழ்ந்து வருகின்றார்கள். 3 தினங்களாக கடும் மழை பெய்து வருகின்ற காரணத்தினால் தங்களுக்குரிய அமைவிடங்கள் இல்லாமையினால் அவர்கள் மிகவும் கஷ்டப் படுகின்றார்கள்.

நாங்கள் 8 ஆயிரம் குடும்பங்களுக்கு தற்காலிக கொட்டில்கள் அமைக்க வேண்டி இருந்தும் கூட சுமார் 3 ஆயிரம் கொட்டில்களை அமைக்கின்ற பணிகளிலே உடனடியாக செய்யக்கூடிய ஏற்பாடுகள் இருந்துள்ளன.

இதோடு மலசலகூட வசதிகளை ஏனைய குடிநீர் வசதியையும் உடனுக்குடன் செய்வதிலே கஷ்டங்கள் இருக்கின்றன.

எங்களுக்குக் கிடைத்த தகவல்களின் படி சுமார் 3 பேர் மனரீதி யாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். பலர் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் மேலும் தொடர்ந்து மலேரியா நோயினால் மக்கள் பாதிக்கப் படலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. ஆனால்மலேரியாநோய்க்குரிய மருந்துகள் எடுத்துக் கொள்வதிலே இங்கு தற்போது தட்டுப்பாடு நிலவுகின்றது. இதுபற்றி வைத்திய அதிகாரிகள் மலேரியா தடுப்புப் பிரிவினருடன் தொடர்பு கொண்ட போது அதற்குரிய மருந் துகளை அனுப்பி வைப்பதில் தாமதங்கள் ஏற்படுமென தெரிவிக் கப்பட்டுள்ளதாகவும் தற்போது கைவசம் இல் லையெனவும் அவர்மேலும் கூறினர் (ச-3)

# அரசாங்கம் சம்பள முரண்பாட்டுப் பிரச்சினையை தீர்த்து சம்பள அதிகரிப்பினை வழங்க வேண்டும்

## இலங்கை ஆசிரியர் சங்க தலைவர் ஜோசப் ஸ்டாலின்

(கொழும்பு)

மாணவச்சமூகத்துக்கு பெரும் பங்காற்றிவரும் எமது ஆசிரியர் , அதிபர் ஒன்றிணைந்த சங்கத்தின் நியாயமான கோரிக்கைகள் எவையுமே நிறைவேற்றப் படுவதில்லை.

அரச சேவை ஊழியர்களாகிய எம்மையே அரசாங்கம் மாற்றாந் தாய் மனப்பான்மையுடன் நடத்துவதானது உலகில் வேறெந்த நாட்டிலும் நடக்காத சம்பவமாகும். ஜனாதிபதியும் அவரது அரசும் அதற்குப் பதில் சொல்லியே ஆக வேண்டும்.

இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.கொழும்பு நிப்போன் ஹோட்டலில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரி வித்ததாவது , இன்று நேற்றல்ல கடந்த பதினொருவருடங்களாக எமது சங்கத்தினரின் சம்பள முரண்பாட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்கப் படாது தொடர்கதையாகிக் கொண்டே செல்கின்றது.

இது விடயமாக ஜனாதிபதியுடனும் கல்வி அமைச்சுடனும் பல தடவைகள் பேச்சு வார்த்தைகள் நடத்தியும் கூட எவ்வித பலனும் இன்று வரை கிடைக்கவில்லை.

ஜனாதிபதியிடம் பேச்சு வார்த்தை நடத்தப்பட்ட போதொல் லாம் எமது யோசனைகளை முன் வைக்கும் படியும் தான் எமது பிரச்சினைகளுக்கு முடிவு பெற்றுத்தருவதாகவும் உறுதி மொழி வழங்கியும் அவை வெறும் பேச்சளவிலேயே காணப்படுகின்றன.

அரசாங்கத்தின் இத்தகைய செயற்பாட்டுக்கு எதிராக நாம் தொழிற் சங்கப்போராட்டங்களை நடத்தினால் அரசு எம்மை பழிவாங்கும் செயல்களிலும் ஈடுபடுகின்றது.

அண்மையில் காலியில் ஆசிரியர் ஒருவர் பதவி நீக்கம் செய்யப் பட்டிருந்தார். அவருக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை. நாம் அரசிடம் கோருவது எமக்கான சம்பள முரண்பாட்டினை தீர்த்து வைத்து சம்பள அதிகரிப்பினை மேற்கொள்ளும் படியே .

ஆனால் அரசு எம்மை ஏமாற்றியே வருகின்றது. எமது கோரிக்கைகளுக்கு நாம் குரல்கொடுக்கும் போது பயங்கரவாதிகளைப் போன்றே அரசு எம்மை நடத்து கின்றது.

எவருக்கு விருப்பம் இருந் தாலும் அரசாங்கத்திற்கு மட்டும் எமது சம்பள முரண்பாட்டுப்பிரச்சினையை தீர்ப்பதற்கு விருப்பம் கிடையாது. என்பது அரசின் மெத்தனப்போக்கிலிருந்து புலனாகின்றது.

ஆனால் அரசாங்கமும் கல்வி அமைச்சும் ஊடகங்களுக்கு தகவல் தரும்போதெல்லாம் மாணவ சமூகத்திற்கும் ஆசிரியர் சமூகத்திற் கும் பெரும் சேவை புரிவதாக அப்பட்டமான பொய்களை கூறி வருகின்றன.

கடந்த ஆகஸ்ட் மாதத்திலும் எமது எதிர்ப்பை தெரிவிக்கும் முகமாக உயர் தரப்பரீட்சை வினாத்தாள் திருத்தும் பணிகளை பகிஸ்கரித்திருந்தோம்.

அதேபோன்று எதிர்வரும் 30ஆம் திகதியும் சுகவீன விடுமுறை போராட்டத்தை முன்னெடுக் கவுள்ளோம். அத்துடன் முதன் முறையாக இவ் வருடம் டிசம்பர் மாதம் 21ஆம் திகதி சாதாரணதர பரீட்சை வினாத்தாள் திருத்தும் பணிகளையும் பகிஸ்கரிக்கும் தீர்மானத்தை மேற் கொண்டுள்ளோம்.

அரசாங்கத்திற்கு இன்ன மும் 2 1/2 மாதங்கள் உள்ளன. கால அவகாசம் தாராளமாக அரசுக்கு உண்டு. ஓர் தார்மீக அரசாங்கமாக இருந்தால் இக்கால எல்லைக்குள் அரசு எமது சங்கத்தின் சம்பள முரண்பாட்டு பிரச்சினையை தீர்த்து வைத்து எமக்கான சம்பள அதிகரிப்பினை மேற்கொள்ளவேண்டும்.

அவ்வாறு அரசு தொடர்ந்தும் எம்மை ஏமாற்றுமானால் நாடாளாவியரீதியில் இதனை விட பாரியளவிலான போராட்டங்களில் நாம் இறங்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும். அந்நிலைக்கு எம்மை ஆளாக்க வேண்டாம் என அரசுக்குக்கூறிக்கொள்கின்றோம் என்றார்.


இச்செய்தியாளர் சந்திப்பில் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் துணைப் பொதுச்செயலாளர் திருமதி தயாளன், இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகச்செயலாளர்திருமதிஎஸ். ஹமீம் உட்பட பல்வேறு ஆசிரிய, அதிபர் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (இ)

# இராசி பலன்

24.10.2008
(ஐப்பசி 8, வெள்ளிக்கிழமை)
மகம் பிற்பகல்5.25மணிவரை
ஏகாதசி பின்னிரவு4.31மணிவரை
இராகுகாலம் 10.32-12.02மணிவரை
சுபநேரம்6.02 -7.32மணிவரை
வைஷ்ணவ ஏகாதசி விரதம்.

| | |
|---|---|
| மேடம் | அஜீரண ரோகம், தாழ்ந்த சுபாவம், வேலைச்சுமை, காரிய தாமதம். |
| இடபம் | கல்வியில் ஆர்வம், அற்பர் உறவு, சுப செலவு, வாகன சுகம். |
| மிதுனம் | நற்கீர்த்தி, கூட்டு முயற்சி, தேகநலன், விருந்துபசாரம். |
| கடகம் | விவாதம், வேலைச்சுமை, தனவிரயம், காரிய தாமதம். |
| சிங்கம் | வெகுமானம், சயனசுகம், அதிக பிரயாசை, கற்பனை மிகுதி. |
| கன்னி | காரிய அலைச்சல், பிதா சிந்தை, பெரியோர் சந்திப்பு ,சுபசெலவு |
| துலாம் | மனமகிழ்ச்சி, நண்பர்கள் சந்திப்பு, தனதானிய சேர்க்கை, குடும்ப சுகம். |
| விருச்சிகம் | நன்கொடை, பெரியோரால் மதிக்கப்படுதல், தூர தேசச் செய்தி, முயற்சி கைகூடும். |
| தனுசு | எதிர்பாராத செலவு, இடமாற்றம், புதியதிட்டமிடல், சரீரப் பிரயாசை. |
| மகரம் | பொருள் விரயம், காரிய தடங்கல், ஆரோக்கியக்குறைவு, திடீர் நன்மை. |
| கும்பம் | செல்வாக்கு, காரிய நன்மை, பணவருவாய், நண்பர்கள் சந்திப்பு. |
| மீனம் | சத்துரு ஜெயம், திடீர் பயணம், சுவாரஸ்யம், முயற்சிகை கூடும். |

வளவன்



தரிசனம்
வலம்புரி

# தமிழர் பார்வையில் மகாவம்சம்



பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா,
வரலாற்றுத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

சமயங்கள் மனித வாழ்வை மேம்படுத்தும் நோக்குடன் தோற்றுவிக்கப்பட்டனவே தவிர அவை மனித சமூகத்திற்கு தீங்கு இழைப்பதை ஒருபோதும் அனுமதிக்கவில்லை.

இது எல்லா வகைச் சமயங்களுக்கும் பொருந்தும்.

இருந்தும் சமயத் தீவிரவாதிகள் காலத் திற்கு காலம் தமது சமயத்தின் நிலைப் பேற்றிற்கும், பிற சமயங்களின் பின்னடைவுக்குமான கருத்துக்களை தூய்மையான சமய சிந்தனைகளுக்குள் கலந்துவிட்டனர் என்ற உண்மை மறுப்பதற்குரியதல்ல.

இவ்விதமே மகாவம்சத்திலும் மதத் தீவிரவாத பிரசாரம் இடம்பெற்றுள்ளது என்பதனை அதில் இடம்பெற்றுள்ள கதைகள் உறுதி செய்கின்றன.

பல்லவர் கால பக்தி இயக்கமானது அவைதீக சமயங்களான பௌத்தத்தினையும், சமணத்தினையும் நசுக்குவதாக தொழிற்பட்டது.

இத்தகைய அடக்கு நிலைகளிலிருந்து பௌத்தத்தைக் காப்பாற்றி அதனை நிலைபேறுடைய வைக்க வேண்டிய தேவையை உணர்ந்த பௌத்த பள்ளிகளின் குருமார்கள் இலங்கையை இந்திய வரலாற்று மரபில் இருந்து பிரித்து தனித்துவமான ஒன்றாக காட்ட முற்பட்டார்கள்.

இதற்காகவே மகாநாமதேரர் மகாவம்சத்தை தம்பதீப கருவுடன் இலங்கையில் பரிணமிக்க வைத்தார்.

இலங்கையை பௌத்த நாடாக ஆக்குவதில் அதிதீவிரம் காட்டிய மகாநாம தேரர் அதற்கேற்றால் போல கட்டுக் கதைகளை மகாவம்சத்தில் சேர்த்துக் கொண்டார்.

புத்த பெருமானின் இலங்கைக்கான மும்முறை விஜயம் , புத்தர் பரிநிர்வாணம் அடைந்த அதே நாளில் விஜயன் இலங்கையில் காலடி எடுத்து வைத்தல், பௌத்தத்தின் வருகை போன்ற கதைகள் எதைக் காட்டுகின்றன?

இலங்கைக்கு விஜயன் காலடி எடுத்துவைத்த நாளை வட இந்தியாவில் போதி மரநிழலில் புத்தபிரான் பரிநிர்வாணம் அடைந்த நாளுடன் இழுத்துத் தொடுக்கு முறையானது மகாநாம தேரர் விரும்பிய எதிர்கால இலங்கைத்தீவு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை அப்பட்டமாக எடுத்துக்காட்டுகின்றதல்லவா?

இந்த அடிப்படையில் இலங்கையிலேயே தேரவாத (உண்மையான) பௌத்தம் நிலைத்த வாழ்வு பெறும் என்ற தம்மதீபக் கருத்து வலிந்து புகுத்தப்படுவதனை அவதானிக்க முடியும்.

மகாவம்சத்தின் நூலாசிரியர் மகாநாம தேரர் கூறிச் செல்லும் சம்பவங்களும் அவற்றை நியாயப்படுத்துவதாக கொடுக்கப்பட்டுள்ள விபரணங்களும் பெருமானிற்கு ஒரு பக்கச் சார்புடையனவாகவும், முன்னுக்குப்பின் முரண்பட்டவையாகவும், எவ்விதத் தொடர்பற்றவையாகவும் இருப்பதனை காணமுடியும்.

தென்னிந்திய அரசியல் ஆக்கிரமிப்பு, அதனைத் தொடர்ந்து அவர்களுடன் அரசியல் போராட்டம் நடத்தி, அவர்களை முற்று முழுதாக இலங்கையிலிருந்து அகற்றி, மீண்டும் சிங்கள வம்சத்தினை நிலைபெற வைத்த காலப் பகுதியில் மகா வம்சத்தின் நூலாசிரியர் வாழ்ந்தமையால் இயல்பாகவே தமிழினத்தின் மீது இனக்காழ்ப்புக் கொண்டவராக விளங்கினார்.

இதனாலேயே அவரால் எழுதி முடிக்கப்பெற்ற மகாவம்சம் என்ற நூலும் பக்க சார்புடையதாக, தேரவாத சமயத்தின் எதிரிகள் தமிழர்கள்.

அவர்களுடைய மதம் மனிதர்களுக்கன்றி விலங்குகளுக்குமே பொருத்தமற்றது என்று கூர்ச்சிக்கின்றார்.

• மகாநாம தேரரின் இனவாத - மதவாத சிந்தனை மகாவம்சத்தில் சீறிப்பாய்ந்துள்ளதை "தேரவாத பௌத்தத்தை தழுவாதவர்கள் மனிதரேயில்லை. அவர்கள் விலங்குகளைக் காட்டிலும் மதிக்கப் படக்கூடாதவர்கள்" என்ற வார்த்தை உறுதி செய்கின்றது.

பௌத்த மதத்தின் நிலைபேற்றிற்காகத் தோற்றுவிக்கப்பட்ட மகாவம்சத்தில் இத்துணை இனவாதக் கருத்துக்கள் தேவைதானா? இந்த கருத்துக்களை கௌதம புத்தபிரான் ஏற்றிருப்பாரா? என்பதனை பௌத்த மதத்தை பின்பற்றுவோர் ஒருகணம் சிந்தித்தாக வேண்டும்.

ஏனெனில் இலங்கையில் நீண்டகாலமாக நீடித்துவரும் இனப்பிரச்சினையின் நுழைவாயிலாக மகாவம்சமே காணப்படுகிறது.

காலசூழல் கருதி -தனி மனித சிந்தனையில் உருவாகிய மகாவம்சத்தை வைத்துக்கொண்டு நிகழ்கால- எதிர்கால வாழ்வை தொலைப்பது என்பது பொருத்தமற்றதும், அறிவியல் சார்ந்ததுமல்ல.

இன்றைய உலகம் தகவல் தொழில்நுட்பத்தின் உச்சத்தில் நின்று ஏனைய கிரகங்களில் மனிதர்கள் இருக்கிறார்களா, அவ்வாறு இருந்தால் அவர்களுடன் எவ்வாறு தொடர்பு கொள்வது, அங்கும் வீடுகட்டிக் குடியிருக்கும்வாய்ப்பு, அடிப்படை வசதிகள் உண்டா என ஆராய்ந்து கொண்டிருக்கும் வேளையில்,

நடைமுறைக்கு எவ்வகையிலும் பொருந்தாத கதைகளையும், கற்பனை வடிவங்களையும், தனித்து ஒருமதம் மட்டும் இருக்க வேண்டும் என்ற பக்க சார்புடனும் உருவாக்கப்பட்ட மகாவம்சத்தைத் தூக்கி நிறுத்தி வாழ்வைத் தொலைப்போம் என சங்கற்பம் கொள்வது அவ் வளவு அழகல்ல.

மகாநாம தேரரின் அதிதீவிர தம்மதீபக் கருத்தின் தாக்கம் மகாவம்சத்தில் பரிணமிக்கின்றது.

ஆரியமயமாக்கம், தனியொரு அரசு, தனியொரு தலை நகர், தனியொரு வம்சம், தனியொரு மதம் என்ற வகையில் இலங்கையின் வரலாறு மகாவம்சத்தில் காட்டப்படுகின்றது.

அவ்வாறாயின் மகாவம்சம் ஒரு வரலாற்று நூல் என்று ஏற்றுக் கொள்வதில் கூட இடர்பாடுகள் உண்டு.

இலங்கையின் வரலாற்றைக் கூறுகின்ற நூலாக மகாவம்சத்தைக் கருத வேண்டுமாயின் , அதனை மகாநாம தேரரே திருத்தியமைத்திருக்க வேண்டும்.

ஏனெனில் மகாவம்சத்தில் இடம் பெறும் வரலாறானது இலங்கை முழுவதையும் உள்ளடக்குவதாக இல்லை.

இலங்கைத் தீவின் ஒரு குறிப்பிட்ட பாகத் தின் சிறப்பாக அநுராதபுரமும் அங்கே அமைந்துள்ள மகாவிகாரையும் அதன் சுற்றாடல் தொடர்பான விபரங்களை மட்டுமே தருவதனால் அந்நூல் குறிப்பிடாமல் தவிர்த்த அல்லது மறைத்த வரலாற்று நிகழ்வுகளையிட்டே நாம் கவலை கொள்ள வேண்டும்.

## மகாவம்சம் முழு இலங்கையின் வரலாற்றைக் காட்டவில்லை

ஏனெனில் இலங்கைத் தீவின் ஒரு பகுதி மட்டும் சுட்டிக்காட்டி அரசியல் வரலாற்றைத் திரிபு படுத்தி ஓர் இனப் பிறழ்வின் அடிப்படையிலே வெறும் இன வரலாறாக - மத வரலாறாக மகாவம்சம் அமைந்துள்ளது.

எனவே மகாநாம தேரர் விட்டுச் சென்ற தவறை நாம் பற்றித் தொடர்ந்து செல்வதென்பது இலங்கைத் தீவின் நிகழ்கால- எதிர்கால அபிவிருத்திக்கும் இன- மத - மொழி ஒற்றுமைக்கும் குந்தகமாகவே அமையும்.

இலங்கையின் வரலாற்றில் பௌத்த சிங்கள மக்களிடம் நிலைபேறடைந்துள்ள மகாவம்சம் தொடர்பில் தமிழ் மக்கள் எந்த எதிர்க் கருத்தியலையும் கொண்டிராத போதிலும் மகாவம்சம் கூறும் நடை முறைக்குப் பொருந்தாத கருத்துக்களுடனும் அவர்கள் உடன்பட்டுப் போவதே தமக்கான துன்பத்தின் அடிப்படை எனத் தமிழ் மக்கள் கருதுவதில் எந்தத் தவறும் இல்லை.

## பரிசளிப்பு விழாவும் நூல் வெளியீடும்

(பருத்தித்துறை)

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய பரிசளிப்பு விழாவும் "நெல்லிக்கனி" நூல் வெளியீடும் நாளை சனிக்கிழமை முற்பகல் 9மணிக்கு கல்லூரி ஆராதனை மண்டபத்தில் அதிபர் செ.சேதுராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தரும் ஊடக வளங்கள் பயிற்சி மைய பணிப்பாளருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை கலந்துகொண்டு "நெல்லிக்கனி" நூலை வெளியிட்டு வைக்கவுள்ளார்.

முதற்பிரதியை நெல்லியடியிலுள்ள செல்லமுத்து புடவையக உரிமையாளர் சு.சண்முகசுந்தரம் பெற்றுக்கொள்வார்.

வெளியீட்டுரையை கல்வியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ச.கலாமணி வழங்கவுள்ளார்.

மாணவர்களுக்கான பரிசில்களை முதன்மை விருந்தினர் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (ஓ)

## சதாபிஷேகப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

இராமநாதன் நுண்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளரும் அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியரும் மிருதங்கப் பேராசானுமாகிய சிதம்பரம் ஏ.எஸ்.இராமநாதனின் சதாபிஷேகப் பெருவிழா நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9மணிக்கு கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் அ.சண்முகதாஸ், சிறப்பு விருந்தினராக கலாநிதி இசையரசு நா.வி.மு.நவரத்தினம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து கலாபூஷணம் ப.சின்னராசா "என் குருநாதர்" எனும் தலைப்பில் உரையாற்றவுள்ளார். அடுத்து சங்கீத பூஷணம் எஸ்.கணபதிப்பிள்ளையின் இசையர்ப்பணம் இடம்பெறும்.

அணிசெய் கலைஞர்க ளாக வயலின் இசைஞான திலகம் உ.ரா தாகிருஷ்ணன், மிருதங்கம் சங்கீதரத்தினம் எம்.சிதம்பர நாதன், கஞ்சிரா வி.ரமணா, கடம் என்.சதீஷ் குமார் ஆகியோர் பங்குபற்றுவர்.

இறுதியாக இசைத்துறை உதவி விரிவுரையாளர் கலாகீர்த்தி திருமதி சாந்தினி சிவநேசனின் நட்டுவாங்கத்துடன் கொக்குவில் கலாபவன மாணவிகளின் நாட்டியார்ப்பணம் இடம்பெறும்.

நிகழ்வுக்கு பாட்டு நுண்கலைமாணி திருமதி சுகன்யா அரவிந்தன், மிருதங்கம்-மிருதங்க நவரச நாதலய சக்கரவர்த்தி சி.மகேந்திரன், வயலின் இசைஞான சுரபி அ.ஜெயராமன் ஆகியோர் அணிசெய்யவுள்ளனர். (ஓ)

## ஏகாதசி விரத பூஜைகள்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீவல்லிபுரநாதர் தேவஸ்தானத்தில் இன்று வெள்ளிக்கிழமை ஏகாதசி விரத பூசைகள் இடம்பெற உள்ளது.

பிற்பகல் 3.30க்கு சங்கல்பத்துடன் ஆரம்பமாகி அபிஷேக ஆராதனைகளை அடுத்து பூதேவி, ஸ்ரீதேவி சமேதராக ஸ்ரீ வல்லிபுரநாதர் உள்வீதி வலம் வரும் திருக்கோலக் காட்சி இடம்பெறும். (ஓ-36)

## சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம்

உறுப்புரை- 24

இளைப்பாறுகைக்கும், ஓய்விற்கும் ஒவ்வொருவரும் உரிமையுடையவர்.

# கோப்பாய் பிரதேச செயலக சிறுவர் , முதியோர் தின விழா

வலிகாம் கிழக்கு-கோப்பாய் பிரதேச செயலக பிரிவின் சர்வதேச சிறுவர், முதியோர் தின விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு பிரதேச செலயக மகா நாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் கலந்துகொள்கிறார்.

சிறப்பு விருந்தினர்களாக சாந்திகம் நிறைவேற்றுப் பணிப்பாளர் எஸ்.வி. சங்கரப்பிள்ளை, வேள்ட் விஷன் சிறுவர் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் ரி.பகிர்தராஜ் மற்றும் லயன்ஸ் கழக யாழ்.மாவட்ட இணைப்பாளர் டாக்டர் வை.தியாகராஜா பிராந்தியம் 08, பிராந்திய தலைவர் லயன் வி.சிறீப் பிரகாஷ், உரும்பிராய் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் எஸ். இராமச்சந்திரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-3)

# பரிசு வழங்கல் தினத்தில் மேற்கொள்ள வேண்டிய ஒழுங்குகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகள் பெரு விளையாட்டுக்கள், தடகளப் போட்டிக்கான பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கல் நாளை சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின்போது பின்வரும் ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு யாழ் வலயக் கல்விப் பணிப்பாளரும், யாழ்.மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டுக் குழுத்தலைவர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுக்கொள்கின்றார்.




- போட்டியாளர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் 8.45 மணிக்கே அமர்ந்து கொள்ளுதல் வேண்டும்.
- போட்டியாளருடன் பொறுப்பாசிரியரும் உடன் இருத்தல்வேண்டும்.
- போட்டியாளர் ஆட்டத்துக்குரிய ஆடையுடன் வருதல்வேண்டும். (ஆடை மாற்ற வேண்டியிருப்பின் அறை ஒழுங்குபடுத்தப் பட்டுள்ளது.
- பெருவிளையாட்டில் வெற்றிபெற்ற அணியினர் தங்கள் பாடசாலைத் கொடியுடன் வருதல் வேண்டும்.
- அணியின் ஒழுங்குக்கு அதிபர், பொறுப்பாசிரியரே முழுப் பொறுப்பாகும்.
- அணிகள் யாவும் உரிய நேரத்துக்கு வருகை தந்து (அணிகள்) ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ஓ)

# யாழ்.குடாநாட்டில் 5000 ஹெக்டெயர் உயர்நிலப் பரப்பு தரிசாகியுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் பயிரிடக்கூடிய உயர் நிலங்களில் 5000ஹெக்டெயர் பரப்பளவு நிலம் பயிர் செய்யப்படாமல் தரிசு நிலங்களாக மாறியுள்ளன.

இதுதொடர்பாக கருத்துத் தெரிவித்த விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் ந. செல்வநாதன் தற்போதைய மானாவாரி காலத்தில் அதாவது மழைகாலத்தில் மறு வயல் பயிர்களான சோளம் ,குரக்கன், கௌபீ ,பயறு, உழுந்து ,கடலை போன்றன மழை நீரை மட்டும் நம்பி பயிர் செய்யக் கூடியன. 1 ஹெக்டெயர் பரப்பளவில் 1000 கிலோகிராம் விளைச்சலைத் தரக்கூடிய இவ் மறுவயல் பயிர்களின் உற்பத்திச் செலவு மிகக் குறைந்தளவானதாகும்.

யூரியா, களைக் கட்டுப்பாடு செலவுகள் போக 1ஹெக்டெயர் பரப்பில் நான்கு இலட்சம் ரூபாவினை நிகர வருமானமாகப் பெற முடியும்.

எனவே தரிசு நில உரிமையாளர்கள், குடியிருப்பாளர்கள் மறு வயல் பயிர்களை பயிடுவதற்கு இம் மழை காலத்தை பயன்படுத்த வேண்டும். மேலும் இப் பயிர் செய்கைக்கு இயற்கை உரங்களான மாட்டெரு, கூட்டெரு போன்றவை பயன்படுத்தப்படுவதனால் உணவு நஞ்சாதல் தடுக்கப்படுவதுடன் பாதுகாப்பானதாகவும் காணப்படும் என விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் ந.செல்வநாதன் தெரிவித்துள்ளார். (ஓ-36)

## கலைஞாயிறு பட்டம் வழங்கிக் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை -உயரப்புலத்தைச் சேர்ந்த ஓய்வூதியர் அ.யேசுரட்ணம் "கலை ஞாயிறு" என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த காலங்களில் பல்வேறு கழக சேவை அமைப்புக்களில் தலைவர் - செயலாளர் பதவி வகித்து சேவையாற்றிய அ.யேசுரட்ணம் மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷினால் "கலைஞாயிறு" என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். (ஓ)





மாகாண மட்டத்தில் முதல் இடம்பெற்று தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றிய பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி கரப்பந்தாட்ட அணியினர் அவர்களது கோல உடையுடன் முதலாவது படத்திலும், சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினரால் நடத்தப்பட்ட சிறுவர் தின நிகழ்வில் இவர்களுக்கு பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்ட நிலையில், பிரதேச செயலர் திருமதி ரூபிணி வரதலிங்கம், உதவிப் பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம், விளையாட்டு அலுவலர் செ.சதீஸ்குமார் ஆகியோருடன் இரண்டாவது படத்திலும் காணப்படுகின்றனர்.

## நிறுவுனர், தினமும் பரிசளிப்பு விழாவும்

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் ஆ. ஜெகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவரும் ஸ்ரீலங்கா ரெலிகொம் பொறியியலாளருமான ச.தங்கராசா கலந்துகொள்ளவுள்ளார். (6-19)

## நூல் வெளியீட்டு விழா

கட்டைவேலி நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச் சங்க கலாசார பெருமன்ற அனுசரணையில் த.ஆனந்தமயிலின் "ஓர் எழுதுவினைஞனின் டயறி" அறிமுக அரங்கும் 16ஆவது சங்க வெளியீடும் சங்கப் பணிமனை மண்டபத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு சங்கத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் முதன்மை விருந்தினராக வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசாவும், சிறப்பு விருந்தினராக கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி க.அம்பலவாணர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-19)

## பதேர் பாஞ்சாலி -திரைப்படம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இடம்பெற்றுவரும் கல்விசார்/ கலைத்துவம் சார் படக் காட்சித் தொடரில் தொடர்ந்து வரும் ஆறு ஞாயிற்றுக்கிழமைகளுக்கு உலகின் தலைசிறந்த இந்திய நெறியாளரான சத்ய ஜித் ரேயின் ஆறு திரைப்படங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

நாளை மாறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30மணிக்கு, அவரின் முதல் படமான "பதேர் பாஞ்சாலி"(1955) திரைப்படம் வீடியோக்காட்சியாக அரசறிவியல் விரிவுரை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது. தொடர்ந்து வரும் ஞாயிறுகளில் அபராஜிதோ (1956), அபுசன் சார்(1959), தீன் கன்யா(1961), சாருலதா (1964),நாயக்(1966) ஆகிய படங்கள் காட்சிப் படுத்தப்படவுள்ளன.

திரைப்படக்காட்சியின் இறுதியில் திரைப் படம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறும். ஆர்வலர்கள் அனைவரும் வருகை தந்து பயன்பெற முடியுமென புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் அறிவித்துள்ளார். (ஓ)

## தடகள பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மெய்வன்மை வீரர்களின் அடைவு மட்டத்தினை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டு யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் சங்கம் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 8.30மணி தொடக்கம் மாலை 3மணி வரை ஒவ்வொரு மெய்வன்மை நிகழ்ச்சிகளுக்குமான பயிற்சியினை வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளது.

முதற்கட்டமாக நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்.இந்துக் கல்லூரியில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை குண்டெறிதல் நிகழ்வுக்கான ஆரம்ப பயிற்சி முறைகள், விஷேட பயிற்சி முறைகள் யாழ். மாவட்ட வீரர்களை தேசிய , சர்வதேச தரத்தில் உயர்த்துவதற்கான பகுப் பாய்வு (Analysis) நடைபெறவுள்ளது.

எனவே இந்நிகழ்வில் சகல குண்டெறிதல் பயிற்றுவிப்பாளர்கள், போட்டியாளர்கள், அனைவரையும் பங்குபற்றி பயன்பெறுமாறு யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் சங்கம் கேட்டுள்ளது. (6)

## தன்னியக்க பணப்பரிமாற்ற நிலையங்கள் திறக்கப்படவில்லை

(அல்வாய்)

நெல்லியடி, சுன்னாகம் பிரதேச இலங்கை வங்கிக் கிளைகளில் தன்னியக்கப் பணப்பரிமாற்ற நிலையங்கள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஹர்த்தால் அனுஷ்டிப்பால் திறக்கப்படவில்லையென அறிவிக்கப்படுகின்றது. (ஓ-19)

# நாட்டிலுள்ள பாடசாலைகளில் இரண்டாம் மொழி ஆசிரியர்களுக்கு தட்டுப்பாடு

## கல்வியமைச்சின் ஆய்வில் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டிலுள்ள பாடசாலைகளில் இரண்டாம் மொழி கற்பிப்பதற்கு 2ஆயிரத்து 332ஆசிரியர்களுக்குத்தட்டுப்பாடு நிலவுவதாக கல்வி யமைச்சின் ஆய்வுக்குறிப்பொன்று தெரிவிக்கிறது.

மேலும் நூலகர் பதவிக்கு2ஆயிரத்து 373பேருக்கான வெற்றிடம் நிலவுகிறது. விசேட கல்விக்கு ஆயிரத்து 272 ஆசிரியர் வெற்றிடம் நிலவுகிறது. கல்வியமைச்சின் மேற்கொண்ட ஆய்வின் பிரகாரம் நாட்டில் 8 ஆயிரத்து 719 ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவுவதாகக் கூறப்பட்டுள்ளது.

ஆங்கிலம் கற்பிக்க 277 வெற்றிடங்களும் நடனம் கற்பிக்க 86வெற்றிடங்களும் உடற்கல்வி கற்பிக்க ஆயிரத்து 573வெற்றிடங்களும் சங்கீதம் கற்பிக்க 168 வெற்றிடங்களும் கர்நாடகசங்கீதம் கற்பிக்க161 வெற்றிடங்களும் உளவியல் கற்பிக்க 543 வெற்றிடங்களும் நிலவுகின்றன.

இவ்வெற்றிடங்கள் பெரும்பாலும் தமிழ் மொழி மூல பாடசாலைகளிலேயே நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது. ஓ

# ஐக்கிய நாடுகள் தின நிகழ்வு

சாவகச்சேரி லயன்ஸ் கழகமும் தென்மராட்சி கல்வி வலயமும் இணைந்து நடத்தும் ஐக்கிய நாடுகள் தின நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. சாவ கச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெற வுள்ள இந்த நிகழ்வுக்கு சர்வதேச லயன்ஸ் கழக 306 பி மாவட்டத்தின் பிராந்தியம் 7, 8, 9இன் தலைவர் லயன் ஸ்ரீபன் லேனாட் முதன்மை விருந்தினராகவும் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வார்.

மேற்படி நிகழ்வில் மாணவர்களுக்கிடையில் ஐக்கிய நாடுகள் தொடர்பான பொது அறிவுப்போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. வலயப்பாடசாலை ஆசிரியர்களின் ஐ.நா.சபை பற்றிய பட்டிமன்றம் சாவகச்சேரி றிபேக் கல்லூரி அதிபர் க. அருந்தவபாலன் தலைமையில் நடைபெறும்.

கடந்த வருட ஜி.சீ.ஈ உயர் தரப்பரீட்சையில் 3 ஏ பெற்ற தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் மாணவர்கள் 8பேர் இந்நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர். ஓ

# விண்ணப்பம் கோரல்

மனித உரிமை நிலையத்தினால் "மனித உரிமைகள் டிப்ளோமா" பாட நெறிக்கான விண்ணப்பங் கள் கோரப்பட்டுள்ளன.

இப் பாடநெறி மும் மொழிகளிலும் 6மாத காலத்தில் இடம்பெறும். இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் எதிர்வரும் டிசம்பர் மாதம் 1ஆம் திகதிக்கு முன்னர் இல.42 ஸ்கெலிடன் வீதி, கொழு ம்பு 5என்ற முகவரியுடனோ அல்லது 0112 50 2703, 0602158863 என்ற தொலை பேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை www. ihrsrilanka.org என்ற இணை யத்தளத்தில் பார்வையிடலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஓ

# இலங்கையில் முதன்முறையாக நடைபெறும் கால்பந்து நடுவர்களுக்கான பயிற்சி முகாம்

(கொழும்பு)

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் ஆசிய கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் 'ஏ' தர நடுவர்களுக் கான சான்றிதழ் பெறத் தேவையான பயிற்சி முகாம் பத்தேகானவில் அமைந்துள்ள தேசிய கால்பந்தாட்டப் பயிற்சி நிலையத்தில் ஒக்டோர் 20 ஆம் திகதி தொடக்கம், நவம்பர் மாதம் 15 ஆம் திகதி வரை நடைபெற்று வருகின்றது.

இலங்கையில் முதன்முறைாக நடை பெறும் இந்தப் பயிற்சி முகாமில் பயிற்றுந ராக ஈரான் நாட்டைச் சேர்ந்த மொஹா செஸ் மொர்டேசா (Mohases Morteza) பணி யாற்று கின்றார்.

இந்தப் பயிற்சி நெறிக்கு தேசிய ரீதியில் 'பி' தர நடுவர்கள் 26 பேரும் பங்களாதேஷ், மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான் ஆகிய சார்க் நாடுகளில் இருந்து தலா இருவருமாக மொத்தம் 34பேர் கலந்து கொள்கின்றனர்.

தேசிய ரீதியில் பயிற்சி பெறத் தெரிவு செய்யப்பட்டவர்களில் 11பேர் சிறுபான்மை யினராவர். அவர்களின் விபரம் வருமாறு,

ஏ.சத்தியராஜ்(குருணாகல்), எம்.வடிவேல் (குருணாகல்), எஸ்.பத்மநாதன்( இலங்கை இராணுவம்), பி.முகுந்தன்(பருத்தித்துறை), பி.ஞானராஜா(மன்னார்), ஈ.பாலேந்திரா அன்ரனி(கொழும்பு), எம்.என்.பக்கீர்அலி (கொழும்பு), எம்.ஐ.எம். இஸ்மாயி(கொழும்பு), எம்.எஸ். எம். பாயிஸ் (கொழும்பு), எம்.ஒஆர். எம்.ஜஸ் மின் (மன்னார்), எம்.எல். அபதாஹிர் (அம்பாறை). ஓ

# சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குள் புகமுயன்ற 4 இலங்கையர்கள் விடுதலை

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவிற்குள் சட்டவிரேதமான முறையில் குடியேற முயற்சித்தமைக்காக கிழக்கு திமோரில் வைத்த கைது செய்யப்பட்டு தடுப்பு காவலில்வைக்கப்பட்டிருந்த 4இலங்கையர்கள்விடுதலை செய்யப்பட்டுள்ளனர். படகொன்றின் மூலம் கிழக்கு திமோரின் ஊடாக அவுஸ்திரேலியா நோக்கி செல்ல முற்பட்ட போது கடந்தஞாயிற்றுக்கிழமை 16பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 7பேர் மாத்திரமே கடவுச்சீட்டை வைத்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில் குறித்த நால்வரும் விசாரணைகளின் போது கிழக்கு திமோரில் தங்கக்கூடிய ஆவணங்களை சமர்ப்பித்த காரணத்தினால் அந்நாட்டு குடிவரவு திணைக்களத்தினால் இவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

எஞ்சிய 12 பேர் குறித்து இது வரையில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என வும் தொடர்ந்தும் குறித்த நபர்கள்தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை தற்போது தடுப்புக்காவலில் உள்ளவர்களில்சிலர் கிழக்குத் திமோரில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர்.

அவுஸ்திரேலியாவிற்கு செல்வதற்காக மலேசிய நிறுவனமொன்றுக்கு ஒவ்வொருவரும் தலா 5 ஆயிரம் முதல் 10ஆயிரம் அமெரிக்கடொலர்களை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஓ




கொமர்ஷல் வங்கியின்

இசுறு சிறுவர் சேமிப்புத் திட்டம்

உங்களுக்கு ஏற்றவாறு இரு வைப்பு முறைகள்


- மாதாந்தம் (ஆகக்குறைந்தது ரூபா 100/= ஆகக்கூடியது ரூபா 2500/=) - 2 வயதிலிருந்து 5 வயது வரை
- முழுத்தொகை (ஆகக்குறைந்தது ரூபா 1000/= ஆகக்கூடியது ரூபா 117,000/=)

உங்கள் பிள்ளைக்கு 18 வயதில் ரூபா 10 இலட்சம் வரை

உங்கள் பிள்ளையின் பிறப்புச் சான்றிதழின் நகல் பிரதியுடன்,
இன்றே அருகிலுள்ள கொமர்ஷல் வங்கிக்குச் சென்று பிள்ளையின் எதிர்காலத்திற்காக இசுறு கணக்கு ஒன்றை ஆரம்பியுங்கள்.

*நிபந்தனைகளுக்கு அமைவாக

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்.



# தரிசனம்

Muslim Information Centre
வலம்புரி

# யாழ். மக்களின் இயல்பு வாழ்வுக்கு குந்தகம் விளைவிக்கும் வீதித்தடை

**யாழ்ப்பாணத்தில் நெடுந்துயராய் அமைந்த வீதித்தடை**

யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கையில் கொன்வோய் (Convoy) என்பது சதா உச்சாடனம் செய்யப்படும் சொற்பதமாகும். இந்தச் சொற்பதத்தை யாழ். மாவட்டத்திற்கு வெளியில் உள்ள மக்கள் அறிந்திருப்பதற்கான சந்தர்ப்பம் இல்லை என்று கூறலாம்.

2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி ஏ-9 பாதை மூடப்பட்ட பின்னர் யாழ்.மாவட்ட மக்கள் வெளி மாவட்டங்களுக்குச் செல்வதற்கான தரை வழிப் பாதை தடைப்பட்டுப் போனது.

இதனால் ஏற்பட்ட யாழ்ப்பாண மக்களின் பயணத் துயரம் தனியான அத்தியாயத்திற்குரியது.

ஏ-9 பாதை பூட்டப்பட்ட பின்னர் வெளியிடங் களுக்கான பயணம் மட்டும் தடைப்பட்டுப்போக வில்லை மாறாக குறிப்பிட்ட வீதிகள் பாதுகாப்புப்படையினரால் குறிப்பிட்ட நேரங்களில் தடை செய்யப்படும் அசௌகரியங்களும் ஏற்படலாயிற்று.

பலாலி படைத்தளத்திலிருந்து முகமாலை முன்னரங்கப்பகுதிக்கும் , முகமாலையிலிருந்து பலாலி படைத் தளத்திற்கும் இடையில் இராணுவத் தளபாடங்களை விநியோகிப்பதற்கான, இராணுவத்தின் வாகன அணி பகல் வேளையில் மட்டும் 2,3 தடவைகள் பயணித் துக் கொள்ளும். பலாலி வீதி, யாழ். ஆஸ்பத்திரி வீதி , கண்டி வீதி ( ஏ-9பாதை) ஆகிய 3 முக்கிய வீதிகளில் பலாலியிலிருந்து முகமாலை நோக்கிச் செல்லும் வாகன அணி முகமாலையைச் சென்றடைவதற்கு குறைந்தது ஒன்றரை மணித்தியாலங்கள் தேவையாக இருக்கும். பலாலியிலிருந்து இராணுவ வாகன அணி புறப்படும் செய்தி வீதியோரக்காவலில் ஈடுபட்டிருக்கும் படையினருக்குஅறிவிக்கப்பட்டதும் விசில் ஊதி பலாலிக்கு முன்னதான கட்டுவன் தொடக்கம் முகமாலைக்கு முன்னதான மக்கள் குடியிருக்கக்கூடிய வரணி வரை வீதித் தடைபோடப்படுகின்றது.

அதாவது பலாலியில் வாகன அணி புறப்பட ஆயத்தமானதும் சுமார் 60 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள வரணியில் பாதை மூடப்படுகிறது. இதே நிலையே முகமாலையில் இருந்து பலாலி நோக்கிய வாகன அணியின் போதும் நடை பெறுகிறது.

இதேபோல் காங்கேசன் துறைவீதி ( கே.கே.எஸ்.வீதி ), பருத்தித்துறை வீதி என்பனவும் வீதித் தடைக்கு உட்படுகின்றன.

இராணுவ வாகன அணியின் பாதுகாப்பிற்கான ஏற்பாடு இதுவென படைத் தரப்புக்கூறிக்கொண்டாலும் வீதித் தடையினால் பொதுமக்கள் எதிர்கொள்ளும் அசௌகரியம் பற்றி யாருமே சிந்திப்பதாக தெரியவில்லை.

ஒரு நாள் இரண்டு நாள் என்றால் கூட சகித்துக்கொள்ள முடியாத நிலை வீதித் தடையில் இருக்கும் போது, வருடக் கணக்கில் இந்த அசௌகரியத்தை யாழ்ப்



பாண மக்கள் அனுபவித்து வரும் தகவலை தென்னிலங்கையில் இருக்கக் கூடிய சிங்கள மக்கள் அறிந்திருப்பார்களா? என்பது சந்தேகமே! அவ்வாறு அறிந்திருந்தாலும், வீதித்தடையால் மக்கள் படும் அவலத்தை அவர்களால் கற்பனை கூடச் செய்து பார்க்க முடியாது.

ஏனெனில் அவர்களின் கற்பனைக்கு எட்டாத துயரமாக யாழ்ப்பாண மக்கள் அனுபவிக்கும் வீதித்தடை அமைந்துள்ளது.

**வேகமாக ஓடும் சோகம்**

காலை 10 மணி தொடக்கம் 11.30 மணி , பிற்பகல் 3மணி தொடக்கம் மாலை 4.30 மணி என்றவாறு நேர அட்டவணையில் அமுலாகும் வீதித் தடை, நேரசூசியை விலகி மேலதிகமாக அமுலாகுவதும் வழமையான விடயமே. வீதித் தடைக்கான நேரம் நெருங்கும் போதெல்லாம் பயணம் செய்வோர் வாகனங்களில் வேகமாக செல்வதைக் காண முடியும்.

குண்டுவெடிப்பு ஒன்று இடம்பெற்று விட்டால் சம்பவ இடத்தில் நிற்பவர்கள் எவ்வாறு ஓட்டம் பிடிப்பார்களோ அதற்கு இணையாக கொன்வோய் வரப் போகிறது என கூறிக்கொண்டு பொதுமக்கள் பதறியடிப்பர்.

அதாவது பலாலி வீதி -கண்டி வீதியில் மக்களின் பயண வேகத்தை பார்த்து விட்டு வீதித்தடை வரப்போகின்றது எனத் தீர்மானித்துக்கொள்ளலாம். வீதித் தடை வந்துவிட்டால் குறைந்தது ஒன்றரை மணி நேரம் காத்திருப்பது கட்டாய மானதாகும்.

பலாலிவீதி -கண்டி வீதியைக் கடக்கக்கூடிய உப வீதிகளில் மரக்கட்டைகளைப் போட்டு வீதித்தடை அமுல் செய்யப்படும். எந்த அவசரதேவையாயினும் அதனை மௌனமாக ஜீரணித்துக் கொள்வதே புத்திசாலித்தனம்.

**எங்கள் அவலத்தை யார் அறிவார்கள்?**

பொருளியல் சிந்தனையில் வீதிகள் தூயபொதுப்பண்டம் என்ற வகுதிக்குள் அடக்கப்படுகின்றன. அவ்வாறாயின் பொதுப்பண்டத்துக்குரிய இயல்புகளுக்கு அமைவாக ஒருவர் வீதியால் செல்வதை எவருமே தடுக்கக்கூடாது. தடுக்கவும் முடியாது.

ஆனால் யாழ்ப்பாணத்தில் இந்த விதி விலக்குப்பெற்றுக்கொள்கிறது.

இராணுவ வாகன அணி செல்வதற்காக வீதித்தடை போடப்படுவது எந்த நாட்டிலும் இல்லாத முறை எனக் கூறினார் பலாலி வீதியில் வசிக்கும் அரச உத்தியோகத்தர் ஒருவர். வீதித்தடை போட்டு விட்டால் வீதியைக்கடப்பவர்கள் கூட்டமாக நிற்பதை மட்டுமே பலர் பிரச்சினையாகக் கருதுகிறார்கள்.

ஆனால் எங்கள் நிலையை ஒரு கணம் சிந்தித்துப்பாருங்கள். வீட்டிற்குள் இருந்து வெளியில் வரமுடியாமல் அடைபட்டுப்போகிறோம். இந்த நிலை பலாலி வீதி-கண்டிவீதிப்பகுதியில் இருக்கக் கூடிய அனைத்துக் குடும்பங்களும் நாளாந்தம் இரு வேளை அனுபவிக்கும் துன்பமாகும்.

வீட்டில் ஒருவருக்கு திடீரென உடல் நலம் பாதிக்கப்பட்டாலும் எதுவுமே செய்யமுடியாது. வீதித்தடையின் போது வீதிக் கடமையில் இருக்கும் படையினரை நெருங்கக்கூட முடியாது. அப்படி நெருங்க முற்பட்டாலும், வெளியே வரவேண்டாம் என சைகை மூலம் காட்டிவிடுவார்.

அப்படியானால் பிரச்சினையை எப்படித் தெரிவிப்பது? உடல்நலம் குன்றியவரை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வது எங்ஙனம்?

இறைவனாகப்பார்த்து வீதித்தடை அமுலில் உள்ள போது சுகயீனம் ஏற்படாமல் காத்துக்கொண்டால் உண்டு. இதை விடுத்து வீதித்தடை அமுலில் உள்ள போது ஒருவருக்கு திடீர் சுகயீனம் ஏற்பட்டால் அதுவும் இறைவனால் தரப்பட்ட தண்டனை என நினைத்து ஆறுதல் அடைவதைத் தவிர வேறு என்ன தான் செய்ய முடியும்? என்பது பெயரைக் கூறவிரும்பாத அந்த அரச உத்தியோகத்தரின் கருத்து.

**வீட்டில் காவலில் வைக்கப்படுகின்றோம்**

வீதித்தடை போட்டுவிட்டால் அடுத்த வீட்டைக்கூட எட்டிப்பார்க்க முடியாது. சுருங்கக் கூறினால் ஒவ்வொரு நாளும் குறைந்தது மூன்று மணித்தியாலங்கள் நாம் வீட்டுக்காவலில் வைக்கப்படுகின்றோம் இவ்வாறு கூறுகின்றார் சாவகச்சேரி- கண்டி வீதியில் வசிக்கும் மு.நாராயணபிள்ளை (வயது 62).

பொதுவாக குற்றம் இழைத்த அரசியல்வாதிகள் அல்லது அரசியல் தலைவர்களே வீட்டுக் காவலில் வைக்கப்படுவார்கள்.

ஆனால் நாங்கள் என்ன குற்றம் செய்தோம்? கண்டி வீதியில் வசிப்பதற்காக தினந்தோறும் மூன்று மணித்தியாலங்கள் வீட்டிற்குள் அடைத்து வைப்பது அடிப்படை மனித உரிமை மீறல் அல்லவா? வீதித்தடைபோட்டுவிட்டால் நாமும் வெளியில் செல்ல முடியாது. நமது வீட்டுக்கு வந்த விருந்தாளிகளும் வெளியேற முடியாது.

பல வேளைகளில் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு சென்ற எமது பிள்ளைகள் வீதித்தடையால் வீட்டுக்கு வர முடியாமல் றோட்டில் காத்து நிற்கின்றனர். உயர் தரப்பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய மாணவர்கள் இரண்டு மணித்தியாலயங்களை வீதியில் காத்திருந்து கடத்துவது என்பது எத்துணை துயரமானது.

இதனால் அவர்களின் கல்வி பாதிக்கப்படுகின்றது. இந்த துயரம் எப்போது தான் நீங்கப்போகிறது? என்ற ஏக்கம் நாராயணபிள்ளைக்கு மட்டுமல்ல யாழ். மாவட்டத்தில் வாழும் ஒவ்வொரு வருக்கும் உரியது தான்.

**பொருளாதாரத்தில் பெரும் நட்டம்**

வீதித்தடையால் எமது வர்த்தக முயற்சிகள் முழுமையாக பாதிக்கப்படுகின்றன. வீதித்தடை அமுல்படுத்தப்படும் இடங்களில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு நுகர்வோர் வரமுடியாது. திடீர் திடீரென வீதித்தடையை படையினர் அமுல்படுத்துவதனால் எமது வாடிக்கையாளர்கள் வேறு வர்த்தக நிலையங்களுக்கு நகர்ந்து விட்டனர்.

இதனால் நாம் மிகுந்த பாதிப் படைந்துள்ளோம் என்கிறார் சுன்னாகம் கே.கே.எஸ்.வீதியில் உள்ள வர்த்தகர் ஒருவர்.

இந்தப்பாதிப்பை விவசாயிகள் , கடற்றொழிலாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் எனப்பலரும் அனுபவித்து வருகின்றனர் என்ற உண்மை மறுப்பதற்குரியதல்ல.

பூனை முட்டாளாக இருந்தால்; எலி அதை விரட்டி அடித்து விடும்.

~ இலங்கை

வலம்புரி

# இலங்கை இனப்பிரச்சினை தீர்வில் தமிழகத்திற்குப் பெரும் பங்குண்டு

ஈழத் தமிழர்களுக்காக தமிழகத்தில் குரல் கொடுக்கும் சூழமைவை அரசியல் இலாபமாக்க முற்படும் தமிழகத்தின் சில அரசியல்வாதிகள் தொடர்பில் மிகுந்த வேதனையே ஏற்படுகின்றது.

இலங்கையில் யுத்தத்தை நிறுத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு வலியுறுத்தி தமிழகத்தின் அரசியல் கட்சிகள் மற்றும் திரைப்பட நடிகர்கள், மாணவர்கள் எனப் பல தரப்பினரும் குரல் கொடுத்து வருகின்றனர்.

இவ்விதம் தமிழகத்தில் எழுந்துள்ள இலங்கைக்கான எதிர்ப்பு இந்திய மத்திய அரசை இலங்கை விவகாரத்தில் தலையிடுமாறு வலியுறுத்துவதற்கானதாகும்.

இருபது வருட காலம் யுத்தம் நடந்து வருகின்ற நிலையில்–நோர்வே அரசு சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அனுசரணையாளராகச் செயற்பட்டு ஒப்பந்தங்கள் எழுதப்பட்ட போதிலும் மாறிமாறி ஆட்சிக்கு வரும் இலங்கை அரசுகள் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் எதனையும் உருப்படியாக முன்வைக்கவில்லை – முன்வைக்கவும் முடியவில்லை.

இதற்கான காரணம் பலவாறாக இருப்பினும் தமிழ் மக்களுக்கு எதனையுமே கொடுக்க அவர்கள் விரும்பவில்லை என்பதே முதன்மைக் காரணமாகும்.

டி.பி.விஜயதுங்க ஜனாதிபதியாக இருந்தபோது இலங்கையில் இனப் பிரச்சினை கிடையாது. இங்கு பயங்கரவாதப் பிரச்சினையே உண்டு எனக் கூறியிருந்தார்.

அப்படியானால் இலங்கையில் இனப்பிரச்சினை உண்டு என்பதை ஏற்றுக் கொள்வதில் கூட இன்னமும் இழுபறி நிலை இருப்பது மறுக்க முடியாத உண்மை.

தேர்தல் காலங்களில் இனப்பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வு காண்பேன் எனக் கூறி சிங்கள மக்களின் ஆதரவைப் பெற்று ஆட்சிக்கு வரும் தலைவர்கள், அஸ்கிரியபீடம் சென்று ஆசி பெற்றதும் தாம் கூறியதை மறந்து யுத்தத்தை ஆரம்பித்து விடுவர்.

நாடு இரண்டாகப் பிளவுபடுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது எனச் சூளுரைப்பர். நாட்டை இரண்டாகப் பிளவுபடுத்தாமல் இருப்பதற்கான வழி எதுவாக இருக்குமெனில்,

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு அவர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதாகவே அமையும்.

இதைவிடுத்து யுத்தம் நடத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென்பது எவ்வகையிலும் பொருத்துடையதல்ல. யுத்தத்தினால் அழிவுகளை மட்டுமே ஏற்படுத்த முடியும்.

எனவே இதுவரை இனப்பிரச்சினைக்கு எந்த விதத் தீர்வுத் திட்டத்தையும் முன்வைக்கும் திராணி இல்லாத அரசு, யுத்தத்தின் மூலம் குறித்த சில இடங்களைக் கைப்பற்றுமாக இருந்தால் தீர்வுத் திட்டம் என்ற சிந்தனை அடியோடு மறந்து விடும்.

யுத்தத்தில் வெற்றி கண்டபின்பு இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்பது எவ்வகையிலும் சாத்தியமாகாது. எனவே தமிழகத்தில் எழுந்துள்ள ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு வேண்டும் என்ற கோஷம் இந்திய மத்திய அரசை, இலங்கை இனப் பிரச்சினையில் தலையிட வைக்கும்.


அதன் மூலம் யுத்தமே இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற வட்டத்துக்குள் அகப்பட்டிருக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை வெளியில் கொண்டு வந்து இனப்பிரச்சினை தீர்வு பற்றிச் சிந்திக்க வைக்கும்.

இந்தச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவது தமிழகத்தின் வரலாற்றுக் கடமை. அதனைத் தமிழகம் செய்யும்போது அதற்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் தமிழகத்தின் சில அரசியல் தலைவர்கள் நடந்து கொள்வது தமிழனத்திற்குச் செய்யும் கெடுதியாகும்.

எனவே இலங்கை இனப்பிரச்சினை தீர்க்கப்படும் வரை அதற்கான களநிலையை இலங்கையில் ஏற்படுத்துவதற்குத் தமிழகத்தால் மட்டுமே உதவ முடியும். அந்த உதவியை தமிழகம் அஞ்சாது செய்தாக வேண்டும். இதற்கு எவரும் இடையூறு செய்தல் ஆகாது.

# தலைமைப் பதவியிலிருந்து நீக்குவதற்கு கட்சியிலுள்ள சிலர் சதித்திட்டம் தீட்டியுள்ளனர்

## கருணா தெரிவிப்பு



(கொழும்பு)

கட்சித் தலைவர் பதவியிலிருந்து நீக்குவதற்கு கட்சியிலுள்ள சிலர் சதித்திட்டம் தீட்டியிருப்பதாக தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கருணா என அழைக்கப்படும் விநாயக மூர்த்தி முரளிதரன் கூறியுள்ளார்.

எனினும், மக்கள் மத்தியில் தமக்கு காணப்படும் ஆதரவு காரணமாக அவர்களால் தன்னை கட்சித்தலைவர் பதவியிலிருந்து நீக்கமுடியாதிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

கிழக்கு மாகாணத்துக்கு பொலிஸ் அதிகாரங்கள் தேவையில்லையென கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பில் கருணா கூறியிருப்பது பதற்றமான சூழ்நிலையை தோற்றுவித்திருப்பதாக தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் கைலேஸ்வரராஜா கொழும்பு ஊடகமொன்றிடம் தெரிவித்தார்.

எனினும், கிழக்கு மாகாணத்துக்கு பொலிஸ் அதிகாரங்கள் அவசியம் இல்லையென தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் அனைவரும் ஏற்கனவே இணங்கியிருப்பதாக கருணா வெளியிட்டுள்ள அறிக்கை யில் குறிப்பிட்டுள்ளார்.

நான் கட்சித் தலைவர் என்ற வகையிலேயே கருத்து வெளியிட்டேன். கருத்து வெளியிடுவதற்கு நான் எவரின் அனுமதியையும் பெறத்தேவையில்லை. இதற்கு மக்களும் இணங்குவார்கள் என கருணா தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

எனினும், கட்சிக்கிடையில் தோன்றியிருக்கும் முறுகல் நிலை தெளிவுபடுத்தப்படவில்லையெனவும் கருணாவிடமிருந்து விளக்கம் கோரப்பட்டிருப்பதாகவும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் கைலேஸ்வரராஜா கூறினார்.

அவரின் கருத்துக்கு தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் பொறுப்பல்ல. தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் உண்மையான தலைவர் குமாரசாமி நந்தகோபனே. எனவே அறிக்கைகள், கருத்துக்கள் வெளியிட முன்னர் கருணா அவரை தொடர்புகொள்ள வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். ஓ

# இந்திய மீனவர்கள் கச்சதீவு செல்வதற்கு லைசன்ஸ் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடக்கின்றது

## இந்திய மத்திய உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல் தெரிவிப்பு



இந்திய மீனவர்கள் கச்சதீவு செல்வதற்கு லைசன்ஸ் வழங்குவதற்கான பேச்சுவார்த்தை இலங்கைஅரசுடன் நடந்து கொண்டிருப் பதாக இந்திய மத்திய உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல் தெரிவித்தார்.

மாநிலங்களவையில் புதன்கிழமை இந்திய மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையின் தாக்குதல் குறித்து தமிழக எம்.பிக்கள் கேள்வியெழுப்பினர். அ தற்குப் பதிலளித்துப் பேசியபோதே, சிவராஜ் பட்டேல் இதனைத் தெரிவித்தார். இந்திய மீனவர்கள் கடலில் எவ்வித அச்சமுமின்றி மீன் பிடிக்கும் வகையில் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான பேச்சுவார்த்தையும் இலங்கை அரசுடன் சுமுகமாக நடப்பதாக சிவராஜ் பட்டேல் தெரிவித்தார்.

கச்சதீவு தொடர்பாக இலங்கை அரசுடன் 1974, 1976 ஆகிய ஆண்டுகளில் இரு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஒப்பந்தத்தின் படி இந்திய மீனவர்கள் கச்சதீவுக்குச் சென்று தாங்கள் பிடித்த மீன்களையும் வலையையும் உலரவைக்கும் உரிமை உண்டு. இந்நிலையில் கச்சதீவு மீது மூன்றாவது ஒப்பந்தம் மேற்கொள்வதற்கான முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

இது நிறைவேறினால் கச்சதீவுக்கு இந்திய மீனவர்கள் அச்சமின்றிச் செல்லலாம். எனினும் கச்சதீவு தொடர்பான ஒப்பந்தங்களின் வரம்புக்கு கட்டுப்பட்டே நாம் நடக்க வேண்டியிருக்கும் என்றார் சிவராஜ் பட்டேல். ஓ

# இவ்வருடம் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதியால் கூடிய வருமானம்

சர்வதேச சந்தையில் இலங்கையில் உற்பத்திசெய்யப்படும் தேயிலை மற்றும் இயற்கை இறப்பர் ஆகியவற்றுக்கு பெருமளவு கிராக்கி நிலவிவருவதால் விவசாய உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதி 32% அதிகரித்துள்ளதாக விவசாய ஏற்றுமதி தொடர்பான ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1கிலோ தேயிலையின் ஆகக் கூடுதலான விலை 4.26 அமெரிக்க டொலர்களாகவும், 1கிலோ இயற்கை இறப்பரின் விலை 3.02 டொலர்களாகவும் உயர்ந்துள்ளது.

இந்த விலை அதிகரிப்பானது இந்த வருடத்தின் ஜனவரி மாதத்திலிருந்த 29 வீதத்திலிருந்து 31 வீதமாக அதிகரித்துள்ளது.

இதேவேளை சிறிய ரக விவசாய உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதியும் மேலதிகமாக 208மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான வருமானத்தை ஈட்டியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது. ஓ

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ் 43

### கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

இறைவனை உணர்ந்தவர் உள்ளத்தில் ஒரு தெளிவு இருக்கும். அவருடைய எண்ணத்திலே இறைவனைப் பற்றிய நினைவுகள் கலந்திருக்கும். தமது அநுபவத்தைப் பிறரோடு பகிர்ந்து கொள்ளும் பெருவிருப்பும் அவரிடம் குடிகொண்டிருக்கும். சுந்தரமூர்த்தி நாயனார் தனது இறையனுபவத்தைப் பிறரிடம் பகிர்ந்து கொள்ளப் பல பாடல்களைப் பாடியுள்ளார். சுந்தரரது இறையனுபவம் ஏனைய நாயன்மார்களின் அனுபவத்தை விட வேறுபட்டது. நெருக்கமான நட்பு நிலையில் இறைவனோடு தொடர்புற்றிருந்தவர்.


உலக வாழ்க்கையின் இன்பங்களையெல்லாம் நுகர இறைவனை அடிக்கடி நாடுபவர். மனித நிலையில் நெருங்கிய நண்பனுடன்பேசுவது போலப் பலபாடல்களைப் பாடியுள்ளார். "பித்தனே" என்று இறைவனை ஏசியவர். இளமைக் காலத்து இன்பவாழ்வுக்கு வேண்டியவற்றைப் பெறுவதற்காக அவர் பாடிய செந்தமிழ்ப் பதிகம் இன்றும் நட்பின் நெருக் கத்தை அறியச் சான்றாக உள்ளது. மனத்திலே தோன்றும் எண்ணங்களைச் செயற்படுத்துவதற்கு மனிதரைக் கேளாமல் இறைவனையே கேட்கலாம் என்ற புதிய தொரு வழியைக் காட்டியவர் சுந்தரர். துன்பங்கள் எம்மைத் தொடரும் போது இறைவனிடம் நேரில் நின்று முறைப்பாடு செய்வதன் மூலம் அவற்றை நீக்கிவிடலாமெனச் சுந்தரர் கூறிய வழி இன்றைய கோயில் வழிபாட்டின் நம்பிக்கையை நன்கு விளக்கி நிற் கிறது.

கோயில் வழிபாட்டினால் மனித மனத்திற்கு எத்தகைய நிறைவு கிடைக்கும் என்பதைச் சுந்தரருடைய பாடல்கள் தெளிவாய்ப் புலப்படுத்தும். எமக்குத் தேவையானவற்றைக் கொடுப்பதற்காகவே இறைவன் கோயிலில் காட்சி தருகிறான். கோவிலுக்குச் சென்று எமது மனக்குறையையும் உடற் குறையையும் எடுத்துக் கூறினால் போதும். அவை எல்லாமே இறையருளால் நீங்கி விடும். மனிதரிடம் எம்நிலையைச் சொல்லுவதால் எப்போதும் எமது குறைகள் நீங்கிவிடாது. ஆனால் கோவிலுக்குச் சென்று இறையுருவின் முன்னே நின்று எம் குறைகளைச் சொல்லும் போது அதைக் கேட்பதற்கு மனிதருக்கும் மேலாக இறைவன் கொடுக்கிறார் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது. அந்த நம்பிக்கை எமது குறைகள் தீரும் என்ற மன நிலையைத் தருகிறது. எமது முயற்சிகளை எம்மளவில் செய்யும் மனப்பக்கு வத்தைத் தருகிறது. வழிபாட்டினால் எமக்குக் கிடைக்கின்ற உச்சமான பலன் இதுவே யாகும் இதற்கான பயிற்சி கோவிலில் கிடைக்கிறது. மனம் பக்குவப்பட்டுவிட்டால் இறைவனை நினைக்கும் பயிற்சி ஏற்படுகிறது. இந்நிலையில் கோவிலுக்குச் சென்று வழிபடாமல் இறைபற்றிய நினைவுடன் எதையும் செய்யக் கூடிய மன ஆற்றல் ஏற்படும். அதுவே சுந்தரர் கூறுவது.

"கண்டமும் கறுதிட்ட பிரானை காணப்பேணுமவர்க் கெளியானை
தொண்டரைப் பெரிது முகப்பானைத் துன்பமும் துறந்தின் பினியானை
பண்டை வல்வினைகள் கெடுப்பானைப் பாகமாமதியான வன்றன்னைக்
கெண்டை வாளைகிளர் புனனீடுர்க் கேண்மையாற் பணியா விடலாமே"

# கூப்பிடுங்கள் சைமண்ட்ஸை!

## ஆஸி.முன்னாள் வீரர்கள் வேண்டுகோள்



(மெல்போர்ன்)

மொகாலி டெஸ்ட் தோல்வியையடுத்து அவுஸ்திரேலிய அணியில் சைமண்ட்ஸ் இடம்பெற வேண்டும் என முன்னாள் வீரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சமீபத்தில் நடந்த பங்களாதேஷ் தொடரின்போது அவுஸ்திரேலிய வீரர் சைமண்ட்ஸ் பயிற்சி மற்றும் அணிக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

இதையடுத்து இந்தியத் தொடருக்கான அணியிலிருந்து நீக்கப்பட்டார். இந்நிலையில் மொகாலி டெஸ்டில் அவுஸ்திரேலியா மோசமான தோல்வியடைய, சைமண்ட்ஸை உடனடியாக அணியில் சேர்க்க வேண்டும் என அவுஸ்திரேலிய முன்னாள் வீரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து முன்னாள் பயிற்சியாளர் ஜான் புக்கானன் அளித்த பேட்டியில், அவுஸ்திரேலிய அணி சைமண்ட்ஸின் பங்களிப்பு இல்லாமல் திணறி வருவது உண்மைதான்.

இவரைப் போன்ற வீரர் அணியில் இடம் பெறுவது மிகப் பெரும் பலம். அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை அவரை உடனடியாக இந்தியா செல்லுங்கள் என்று சொன்னால் அதை அவர் மறுக்கமாட்டார். அவர் அடுத்த விமானத்தில் இந்தியா செல்வார் என நம்புகின்றேன் இவ்வாறு புக்கானன் தெரிவித்தார்.

**வேறு வழியில்லை**

இது குறித்து டெய்லி டெலிகிராப் வெளியிட்டுள்ள செய்தியில் அவுஸ்திரேலிய அணி கிரிக்கெட் வரலாற்றின் மோசமான வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது.

இதிலிருந்து அணியை மீட்க சைமண்ட்ஸுக்கு வாய்ப்புக் கொடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என்கின்றது. சைமண்ட்ஸை இந்தியத் தொடரில் சேர்க்க வேண்டுமா? என அவுஸ்திரேலிய பத்திரிகை ஒன்று நடத்திய கருத்துக் கணிப்பும் அவருக்கு ஆதரவாகவுள்ளது. 70 சதவீத அவுஸ்திரேலியர்கள் சைமண்ட் ஸைச் சேர்க்க வற்புறுத்தியுள்ளனர்.

**வருகின்றார் ஷேன் மார்ஷ்**

காயமடைந்த பில் ஜாக்சுக்குப் பதிலாக இந்தியத் தொடரில் சைமண்ட்ஸ் இடம்பெற வேண்டும் என்று முன்னாள் வீரர்களின் கோரிக்கையை அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை நிராகரித்துள்ளது.

இவரின் இடத்தில் ஷேன் மார்ஷ் பங்கேற்பார் என அவுஸ்திரேலிய தேர்வுக் குழுத் தலைவர் அன்ட்ரூ ஹில்டிச் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் அளித்த பேட்டியில், ஷேன் மார்ஷ் திறமையான வீரர். அவுஸ்திரேலியாவின் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரங்களில் ஒருவரான இவர், இந்தியத் தொடரில் அசத்துவார் என நம்புகின்றோம் என்றார்.

## இறுதிப்போட்டியில் கென்யா,சிம்பாவே அணிகள் மோதல்

(நைரோபி)

கென்யா, சிம்பாவே, அயர்லாந்து ஆகிய மூன்று அணிகள் மோதும் முத்தரப்பு ஒரு நாள் தொடர் கென்யாவில் உள்ள நைரோபியில் நடக்கிறது.

இதில் சிம்பாவே, கென்யா அணிகள் கடைசி லீக் போட்டியில் நேற்று மோத இருந்தது. ஆனால் மழை காரணமாக போட்டி தடை செய்யப்பட்டது.

இதன் மூலம் மூன்று அணிகளும் லீக் சுற்றில் தலா ஒரு வெற்றி, ஒரு தோல்வியுடன் ஒரே புள்ளியில் இருந்தன.கடைசி மூன்று லீக் போட்டிகள் மழை காரணமாக தடைசெய்யப்பட்டது.

இதனால் ஓட்ட விகித அடிப்படையில் முதல் இரண்டு இடங்களில் இருந்த சிம்பவே மற்றும் கென்யா அணிகள் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றன. இவ்விரு அணிகள் மோதும் இறுதிப் போட்டி நாளை நைரோபியில் நடக்கிறது.

# ரஷ்ய வீராங்கனைகள் போர்க் கொடி

பெண்கள் டென்னிஸ் என்றாலே உடனே நினைவுக்கு வருபவர்கள் ரஷ்ய வீராங்கனைகள்தான். கவர்ச்சியும் டென்னிஸ் கலையும் கொண்டவர்கள் என்பதால் இவர்கள் பங்கேற்கும் தொடர்களில் ரசிகர்கள் கூட்டம் அலைமோதும்.

முதல் பத்து வீராங்கனைகள் வரிசையில் ஐந்து இடத்தை தங்கள் வசப்படுத்தி ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இந் நிலையில் டபிள்யூ.டி.ஏ.(பெண்கள் டென்னிஸ் சங்கம்) அடுத்த ஆண்டு முதல் போட்டிகளில் புதிய விதி ஒன்றை புகுத்தத் திட்டமிட்டுள்ளது.

இதன்படி மியாமி, மாட்ரிட், இந்தியன் வெல்ஸ் ஓபன் மற்றும் பீஜிங் ஓபன் தொடர்களில் முதல் பத்து வீராங்கனைகள் கட்டாயம் பங்கேற்க வேண்டும் என அறிவித்துள்ளது.

அதே சமயம் கனடா, டுபாய், ரோம் ஓபன் உள்ளிட்ட சில தொடர்களில் ஏதாவது நான்கில் விளையாட நிர்ப்பந்தம் செய்துள்ளது. இதற்கு ரஷ்ய வீராங்கனைகளிடமிருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

டபிள்யு.டி.ஏ. அறிவித்த தொடர்களில் பங்கேற்கும் சமயத்தில் தங்கள் சொந்த நாடான ரஷ்யாவில் நடக்கும் போட்டிகளில் பங்கேற்க முடியாமல் போய்விடும் என்பதே இதற்குக் காரணம். இது குறித்துச் சமீபத்தில் வெளி



யான டென்னிஸ் தர வரிசையில் 2-வது இடம் பிடித்துள்ள ரஷ்ய வீராங்கனை டினரா சபினா அளித்த பேட்டியில்,

டபிள்யூ.டி.ஏயின் முடிபு வருத்தம் அளித்துள்ளது. புதிய விதிகளை அவர்கள் வாபஸ் பெறாவிட்டால் அடுத்த ஆண்டு நடக்கும் டென்னிஸ் தொடர்களைப் புறக்கணிக்கும் முடிபை எடுக்கவும் தயங்கமாட்டோம்.

போட்டிகளில் கண்டிப்பாகப் பங்கேற்க வேண்டும் என யாரும் யாரையும் நிர்ப்பந்திக்க முடியாது. அவர்கள் குறிப்பிட்டுள்ள தொடர்களில் ஏதாவது நான்கில் முதல் பத்து வீராங்கனைகள் பங்கேற்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதை ஏற்றுக் கொள்ள முடியாது. இதில் பல குறைபாடுகள் உள்ளன. இவ்வாறு சபீனா தெரிவித்துள்ளார்.

# டில்லியில் ஆஸி.வீரர்களை ஒருகை பார்க்க இருக்கிறேன்

## அணித் தலைவர் கும்ளே கூறுகிறார்

(புதுடில்லி)

காயம் நன்றாக குணமடைந்து விட்டது. டில்லி டெஸ்டில் அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்களை ஒருகை பார்க்கத் தயாராக இருக்கிறேன் என்கிறார் இந்திய அணித் தலைவர் கும்பிளே.

இந்திய அணியின் டெஸ்ட் அணித்தலைவர் அனில் கும்பிளே பெங்களூரில் நடைபெற்ற முதலாவது டெஸ்டில் விக்கெட் கைப்பற்ற முடியாமல் திணறினார்.

இந்நிலையில் காயம் காரணமாக மொகாலி டெஸ்ட்டில் பங்கேற்கவில்லை. மூன்றாவது டெஸ்ட் நடக்கும் டில்லி பெரோஷா கோட்லா மைதானம் கும்ளேயுக்கு மிகவும் ராசியானது.

கடந்த 1999இல் இங்கு நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் ஒரு இன்னிங்ஸ்சில் 10 விக்கெட் வீழ்த்தி உலக சாதனை படைத்தார். தற்போது காயம் குணமடைந்த நிலையில் அவுஸ்திரேலிய வீரர்களை ஒருகை பார்க்கத் தயாராக இருக்கிறேன் என்கிறார். இது குறித்து அவர் அளித்த பேட்டியில்,

மொகாலியில் இந்திய அணி வெற்றி பெற்றது மகிழ்ச்சி அளிக்கிறது. தோனி சிறந்த அணித்தலைவராக ஜொலித்தார். அவர் அணியை வழிநடத்தி சென்ற விதம் பாராட்டுக்குரியது.

போட்டி முழுவதும் இந்திய வீரர்கள் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். இப்போட்டியில் நான் பங்கேற்காதது துரதிர்ஷ்டவசமானது.

ராசியான டில்லி மைதானத்தில் அவுஸ்திரேலிய துடுப்பாட்டவீரர்களை ஒருகை பார்க்க தயாராக இருக்கிறேன்.

அமித் மிஸ்ராவின் பந்து வீச்சு அருமையாக இருந்தது. பந்தை நன்றாக சுழற்றுகிறார். இவரது பந்துவீச்சை ரசித்து பார்த்தேன். தனது முதல் இன்னிங்சில் அதுவும் அவுஸ்திரேலியா போன்ற வலுவான அணிக்கு எதிராக ஐந்து விக்கெட் வீழ்த்தியுள்ளார்.

இவரை போன்ற வீரர்தான் எதிர்கால இந்திய அணிக்கு தேவை. உள்ளூர் போட்டிகளில் கடுமையாக உழைத்தன் பலன் தற்போது அவருக்கு கிடைத்துள்ளது.

இவ்வாறு கும்பிளே தெரிவித்தார். கும்பிளேயுக்கு தேர்வு குழுத் தலைவர் ஸ்ரீகாந்தும் ஆதரவு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் அளித்த பேட்டியில், கும்பிளே சிறப்பாக விளையாடுவார் என்ற நம்பிக்கை இருக்கிறது. கடைசி இரண்டு டெஸ்டிலும் அவர் இடம்பெற வேண்டும் என்பதால்தான் மொகாலியில் விளையாடவில்லை என்றார். (5)

# தமிழ்நாட்டில் ரயில் மறியலில் ஈடுபட்ட பல்லாயிரக்கணக்கானோர் கைது



(சென்னை)

ஈழத் தமிழர்கள் படுகொலையைக் கண்டித்துத் தமிழ்நாடு முழுவதும் நேற்று வியாழக்கிழமை ரயில் மறியல் போராட்டம் நடத்திய விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர்.

சென்னை மத்திய ரயில் நிலையத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சிப் பொதுச் செயலாளர் தொல்.திருமாவளவன் மறியலில் ஈடுபடப் போவதாக அறிவித்திருந்தார்.

விடுதலைச் சிறுத்தைகள் ஊர்வலமாகப் புறப்பட திட்டமிட்டிருந்த மெமோறியல் அரங்கம் பகுதியிலும் ஏராளமான பொலிஸார் நிறுத்தப்பட்டனர்.

இதனை அறிந்த தொல்.திருமாவளவன் ரயில் மறிலை நடத்தியே தீருவது என்ற முடிபில் தன் திட்டத்தை மாற்றினார். அதன்படி திடீரென அவர் காலை 9 மணியளவில் பேசின் பிரீட்ஜ் ரயில் நிலையப் பகுதிக்கு வந்தார்.

தொல்.திருமாவளவனுடன் சுமார் ஆயிரம் விடுதலைச் சிறுத்தைகள் திரண்டு வந்தனர். அவர்களுடன் தொல்.திருமாவளவன் பேசின் பிரீட்ஜ் ரயில் நிலையப் பகுதியில் ஓரிடத்தில் அமர்ந்தார்.

அங்குள்ள ஆறு தண்டவாளங்களில் அமர்ந்து விடுதலைச் சிறுத்தைகள் மறியலில் ஈடுபட்டனர். தொல்.திருமாவளவன் தண்டவாளத்தில் படுத்து மறியல் செய்தார்.

இதனையடுத்துச் சுமார் ஆயிரம் விடுதலைச் சிறுத்தைகளும் தண்டவாளத்தில் படுத்தனர். கட்சிக் கொடி ஏந்தி படுத்திருந்த தொல்.திருமாவளவன், சிங்கள அரசே தமிழன மக்களைக் கொல்லாதே என்று முழங்கினார்.

மத்திய அரசே சிங்கள அரசின் தாக்குதல் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்து என்றும் முழக்கமிட்டார். விடுதலைச் சிறுத்தைகளின் மறியல் போராட்டத்தில் தமிழர் தேசிய விடுதலை இயக்கத் தலைவர் தியாகு, நடிகர் மன்சூரலிகான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முழுவதும் பல்லாயிரக்கணக்கான விடுதலைச் சிறுத்தைகளும் கைது செய்யப்பட்னர். இதனிடையே மதுரையில் இரண்டு ரயில் பெட்டிகளுக்குத் தீ வைக்கப் பட்டன. (ச-5)

# தமிழ்நாடு முழுவதும் இன்று மாணவர் வகுப்புப் புறக்கணிப்பு

(சென்னை)


இலங்கை அரசுக்கு ஆயுதங்கள் வழங்க வேண்டாம் என வலியுறுத்தி தமிழகம் முழுவதிலும் இன்று வகுப்பு புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாணவர் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

சென்னையில் ஒக்டோபர் 20ஆம் நாள் நடைபெற்ற அனைத்து மாணவர் கூட்டமைப்பு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிபின்படி வரும் முதல்கட்டமாக ஒக்டோபர் மாதம் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தமிழகத்தின் அனைத்து கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் வகுப்பு புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து அந்தந்தக் கல்லூரிகளின் முன்பு கறுப்புக்கொடியேற்றி ஈழத்தமிழரின் இன்னல்களை விளக்கி ஆர்ப்பாட்டமும் நடைபெறவுள்ளது.

இதில் தமிழகத்தைச் சேர்ந்த அனைத்துக் கல்லூரி மாணவர்களும் இதில் பங்கேற்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் என அவ்வமைப்பின் அறிக்கையில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ச-5)

# இரசாயனத் தாக்குதலுக்கு முகங்கொடுக்கத் தயார்-நிமல்



(கொழும்பு)

புலிகள் இரசாயனத் தாக்குதல் மேற்கொண்டால் அதற்கு முகம் கொடுப்பதற்கு சுகாதாரப் பிரிவு தயாராக இருப்பதாக சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

புலிகளின் இரசாயனத் தாக்குதல் தொடர்பில் ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் ரணவீர பத்திரன எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் முகமாக அவர் இவ்வாறு கூறினார்.

புலிகளின் இரசாயனத் தாக்குலுக்கு உள்ளாகும் படையினருக்கு சிகிச்சை அளிப்பதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மேலும் கூறினார். (ச-5)

## ஆயுதம் ஏந்திப் ...

இந்திய அரசு, இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக ஆயுதம் மற்றும் ராடர் கருவிகளை சிங்கள அரசுக்கு வழங்கி இனப்படுகொலையை ஊக்குவித்து வருகிறது.

இதற்கு நான்காண்டுகாலம் மத்தியில் ஆட்சி செய்துவரும் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான காங்கிரஸ் அரசும் அதில் இடம்பெற்றுள்ள கூட்டணிக்கட்சிகளும்தான் காரணம் என்று நான் குற்றம் சாட்டினேன்.

ஈழத்தமிழர்களுக்கு எதிராக மத்திய அரசு ஆயுதங்கள் வழங்கி வருவதால் தேவைப்பட்டால் ஈழத்தமிழ் மக்களுக்கு ஆதரவாக கையில் ஆயுதம் ஏந்திப் போராடுவேன் என்று தான் சொன்னேன். இதில் மாற்றுக்கருத்து இல்லை.

இலங்கையின் ஒருமைப்பாட்டைக் காக்க இந்தியாவின் ஒருமைப்பாட்டை இழந்து விடாதீர்கள். இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இதேநிலை நீடித்தால் எதிர்காலத்தில் இந்திய ஒருமைப்பாட்டை தமிழர்கள் இழந்துவிடுவார்கள். ஒருமைப்பாட்டை காப்பாற்ற வேண்டும். இதைத்தான் கண்ணப்பனும் நானும் சொன்னேன்.

இந்த கைது நடவடிக்கைக்கு முதலமைச்சர் கருணாநிதிதான் காரணம். இலங்கைக்கு ஆயுத உதவி செய்வதற்கு முதலமைச்சர் கருணாநிதி முழுப்பொறுப்பேற்க வேண்டும்.

மனிதச் சங்கிலி நடத்துவதென்பது கண்துடைப்பு நாடகம். மக்களை ஏமாற்றுவதற்காக இதை நடத்துகிறார்கள் என்றார் அவர். (ச-5)

# உணவுக் கப்பல்கள் எதுவும் மூழ்கடிக்கப்படவில்லை

## அமைச்சர் யாப்பா தெரிவிப்பு

விடுதலைப் புலிகள் கூறுவதுபோல் காங்கேசன்துறையில் எமது விநியோகக் கப்பல்களில் ஒன்று மூழ்கடிக்கப்படவில்லை. ஒரு கப்பலுக்கு மாத்திரம் சிறு சேதம் ஏற்பட்டது.

இரண்டு கப்பல்களிலும் யாழ்ப்பாணத்துக் கொண்டு செல்லப்பட்ட சீமெந்து மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் காங்கேசன்துறைமுகத்தில் இறக்கப்பட்டுள்ளன என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான அனுர பிரியதர்சன யாப்பா கூறினார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுக் காலை நாடாளுமன்றக்குழு அறையில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோது அவர் இவ்வாறு கூறினார். இங்கு அமைச்சர் மேலும் கூறியதாவது,

தமது மக்களின் நலனில் புலிகளுக்கு எவ்வித அக்கறையும் இல்லை என்பதையே இக்கப்பல்கள் மீதான தாக்குதல்கள் உறுதிப்படுத்துகின்றன.

வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் சகல பிரதேசங்களுக்கும் அரசு சீரான உணவு விநியோகத்தை மேற்கொண்டுள்ளது. வடக்கில் உணவுக்கப்பல் மீது புலிகள் நடத்திய தற்கொலைத்தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று யாழ்ப்பாணத்தில் ஹர்த்தால் நடத்தப்பட்டதாக தமக்கு அறிவிக்கப்பட்டதாகவும் அமைச்சர் மேலும் கூறினார். (ச-5)

## தமிழகத்துக்கு அகதிகள்...

என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறியுள்ளார்.

லோக் சபாவில் நேற்றும் இலங்கை இனப்பிரச்சினை குறித்து விவாதம் சூடாக நடந்தது. விவாதத்துக்கு பதிலளித்து பிரணாப் முகர்ஜி பேசுகையில் இலங்கையுடனான பாதுகாப்பு உறவு முக்கியமானது.

அதேசமயம் இராணுவ நடவடிக்கை மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது என்பதில் இந்தியா உறுதியாகவுள்ளது.

இனப்பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கையால் தீர்வு சாத்தியமல்ல. அமைதியான முறையில் அரசியல் பேச்சுவார்த்தை மூலம் மட்டுமே தீர்வு காணமுடியும்.

பேச்சுவார்த்தை மூலம் மட்டுமே தீர்வு சாத்தியமாகும். இதை இலங்கை அரசு உறுதி செய்யவேண்டும். இலங்கையில் இருந்து தமிழகத்துக்கு அகதிகள் வருவதை இந்திய அரசு விரும்பவில்லை.

இலங்கையில் நீடித்துவரும் போரால் அப்பாவி பொதுமக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருவது இந்திய அரசுக்கு கவலை தருகிறது என்றார் பிரணாப் முகர்ஜி. (ச-5)

## பழ.நெடுமாறன் கண்டனம்

தனித்தமிழ்நாடு கோரத் தூண்டியதாக கைது செய்யப்பட்டுள்ள ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ உள்ளிட்டோரை விடுதலை செய்ய வேண்டும் என்று தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் வலியுறுத்தியுள்ளார்.

ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ கைது செய்யப்பட்டிருப்பதை வன்மையாக கண்டிக்கிறேன். ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக தமிழர்கள் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டிய காலகட்டமிது. தமிழ்ப்பகைவர்கள் சிலர் கூச்சல் போடுகிறார்கள் என்பதற்காக இத்தகைய கைது நடவடிக்கைகளை தொடர்வது ஜனநாயக விரோத செயலாகும். உடனடியாக அவரை விடுதலை செய்யும்படி வற்புறுத்துகிறேன் என்று அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## இந்தியாவுக்குச் செல்லும் விசேட...

தமிழ் அமைச்சர்களோ,நாடாளுமன்ற தமிழ் உறுப்பினர்களோ இடம்பெறமாட்டார்கள் என்றும் வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று காலை நாடாளுமன்றக்குழு அறையில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அமைச்சர் மேலும் கூறியதாவது,

வன்னியில் நடைபெறும் படையினரின் மனிதாபிமான நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு தெளிவான விளக்கத்தை தொலைபேசி உரையாடல் மூலம் வழங்கினார்.

பொதுமக்களுக்கு எந்தவித உயிர்ச்சேதமும் இல்லாமல் கிழக்கு பிரதேசம் பயங்கரவாதப் பிடியில் இருந்து மீட்கப்பட்டதுபோல் வடக்கும் மீட்கப்படும் என்றும் பொதுமக்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்றும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

இதனையிட்டு இந்திய அரசு திருப்தியடைந்துள்ளது. அதன் தொடர்ச்சியாகவே ஜனாதிபதியின் விசேட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ எம்.பி தலைமையிலான குழு எதிர்வரும் 26 ஆம் திகதி இந்தியா செல்லும்.

இதில் தமிழ் அமைச்சர்களோ நாடாளுமன்ற தமிழ் உறுப்பினர்களோ இடம்பெறமாட்டார்கள். இப்போது மழைகாலம் என்பதால் வன்னியில் இடம்பெயர்ந்த மக்களுக்கு கூடாரங்களை வழங்க அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சீனாவிலும் மியன்மாரிலும் இயற்கை அனர்த்தம் ஏற்பட்டபோது அவர்களுக்கு நாம் இலங்கையில் இருந்து கூடாரங்கள் அனுப்பி வைத்தோம். வன்னியில் இடம்பெயர்ந்தவர்கள் எமது மக்கள். அவர்களுக்கும் நாம் நிச்சயம் கூடாரங்களை அனுப்பிவைப்போம். அதற்கான துரித நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்காக இந்தியா உதவிகள் வழங்க முன்வந்தால் அவற்றை மறுக்காமல் ஏற்போம். இந்தியாவுக்கு இலங்கையும் அவ்வாறான உதவிகளை முன்னர் அனுப்பியுள்ளது.

வடக்கில் படை நடவடிக்கைகளை நிறுத்துமாறு இந்திய மக்கள் கோரவில்லை. அது தமிழ் நாட்டில் உள்ள சில அரசியல்வாதிகளின் கோரிக்கை மட்டுமே.

இலங்கையின் உள்விவகாரங்களில் இந்தியா ஒருபோதும் தலையிடாது. நேற்று முன்தினம் இந்திய லோக் சபையில் இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆற்றிய உரை இதனை உறுதிப்படுத்தியுள்ளது.

வன்னியில் உள்ள பொதுமக்களை பாதுகாப்பதும் அவர்களுக்கு உணவு உட்பட அத்தியாவசிய தேவைகளையும் வழங்குவதும் எமது அரசாங்கத்தின் கடமை என்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதே நிலைப்பாட்டில் தான் இலங்கை அரசும் செயற்பட்டுவருகிறது. இலங்கையின் கடல் எல்லைக்குள் நுழையும் இந்திய மீனவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த இரு நாடுகளினதும் கடற்படையினர் கூட்டு நடவடிக்கை ஒன்றை அமுல்படுத்தவுள்ளனர்.

இலங்கையில் பயங்கரவாதத்தை தோற்கடித்து மக்களுக்கு ஜனநாயக உரிமைகளை வழங்க அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு இந்தியா பூரண ஒத்துழைப்பு வழங்கும் என்றும் அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார். (ச)

## இலங்கைத்...

தொடர்ந்து நேற்று முற்பகல் நூற்றுக்கணக்கான சட்டக் கல்லூரி மாணவர்கள் தூதரகத்தை முற்றுகையிட்டனர்.

தொடர்ந்தும் தூதரகத்துக்குள் நுழைந்தும் அங்கிருந்த தூதரகப் பணியாளர்களை தாக்கியும் அலுவலகத்தை நிர்மூலமாக்கியும் தங்களது ஆவேசத்தை வெளிப்படுத்தினர்.

இதனையடுத்து அங்கு நான்குமுறை துப்பாக்கிச் சூட்டை சென்னை பொலிஸார் நடத்தினர் என்று போராட்டக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இப்போராட்டம் தொடர்பாக 30 மாணவர்கள் கைது செய்யப்பட்டு நேற்று இரவு விடுவிக்கப்பட்டுள்ளனர். (ச-5)

## தனித் தமிழ்நாடு கோரிய...

கண்ணப்பன் கோவை அருகே உள்ள அவரது சொந்தக் கிராமத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். இருவருமே இந்திய குற்றவியல் சட்டம் 124-ஏ, தேசத் துரோகம் மற்றும் சட்டவிரோதச் செயல்கள் தடுப்புச் சட்டம் பிரிவு 131 பி ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றம் புரிந்தார்கள் என பொலிஸாரின் தகவலறிக்கை கூறுகிறது.

கடந்த செவ்வாய் அன்று சென்னையில் ம.தி.மு.க. ஏற்பாடு செய்திருந்த இலங்கையில் நடப்பது என்ன என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசியபோது வைகோவும் கண்ணப்பனும் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாகவே இருவர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

இப்பேச்சுக்களின் பின்னணியில், மற்றும் அண்மையில் இராமேஸ்வரத்தில் நடந்த திரைப்படக் கலைஞர்கள் பேரணியின்போது தெரிவிக்கப்பட்ட சில கருத்துக்களுக்கு கடும் கண்டனம் தெரிவித்து அ.இ.அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா புதன்கிழமை அன்று ஓர் அறிக்கை வெளியிட்டிருந்தார்.

அதில் அவர் பொடா சட்டம் இல்லாத காரணத்தினால்தான் இப்படிப் பேசுகின்றனர். தான் ஆட்சியில் இருந்தால் அப்படிப் பேசுவோர் கைது செய்யப்பட்டிருப்பார்கள் என்றும் விடுதலைப் புலிகளை ஆதரிப்பவர்கள் தேசத் துரோகிகள் என்றும் அவர் கூறியிருந்தார்.

ம.தி.மு.க இன்னமும் அ.தி.மு.கவின் கூட்டணியில்தான் உள்ளது. அண்மையில் ஜெயலலிதாவே தமிழக அரசு இலங்கைத் தமிழர்களுக்கு போதிய உதவி செய்யவில்லை என்று குற்றஞ்சாட்டியிருந் தார்.

ஆனால் அவர் பின்னர் தனது ஆதரவு இலங்கைத் தமிழர்களுக்குத்தான் விடுதலைப் புலிகளுக்கு அல்ல என்றார்.

### ஜெயலலிதா கண்டனம்

வைகோ மற்றும் கண்ணப்பன் கைது செய்யப்பட்ட பிறகு அறிக்கை வெளியிட்ட ஜெயலலிதா, அவர்களை கைது செய்ய முதல்வர் கருணாநிதிக்கு தார்மீக உரிமை இல்லை. ஏனெனில் தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கத் தலைவர்களுக்கு இரங்கற் பா எழுதி இலங்கைத் தமிழர் பிரச்சினையை விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக மாற்றியது முதல்வர் கருணாநிதிதான்.

எனவே முதலில் அவர்தான் கைது செய்யப்படவேண்டும். அதற்காக முதற்கட்டத்தில் தி.மு.க அரசை மத்திய அரசு கலைக்க வேண்டும் எனக் கோரியிருக்கிறார்.

தவிரவும் வைகோவையும் கண்ணப்பனையும் கைது செய்த தமிழக அரசு ஏன் இராமேஸ்வரத்தில் இந்திய இறையாண்மைக்கு எதிராக கருத்துத் தெரிவித்த சீமான், அமீர், பாரதிராஜா மற்றும் பேரணிக்கு ஏற்பாடு செய்த இராமநாராயணன் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை எனக்கேட்டுள்ளார்.

### தி.மு.க. கருத்து

வைகோ தடை செய்யப்பட்ட இயக்கத்துக்கு ஆதரவாக பேசியதன் காரணமாகவும், தனித் தமிழ்நாடு வேண்டும் என்று பேசியதும் ஆயுதம் ஏந்திப் போராட தயார் என்று கூறியதும் சட்டத்திற்கு புறம்பானது என்றும் அதனால் சட்டம் தனது கடமையைச் செய்துள்ளதாக தி.மு.க. செய்தித் தொடர்பாளர் டி.கே.எஸ். இளங்கோவன் தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சியும் வைகோ கைது செய்யப்பட்டுள்ளதை வரவேற்றுள்ளது. (ச-3,5)

## யாழில் நேற்று...

தெரிவித்து ஈ.பி.டி.பி அமைப்பினரால் இக் ஹர்த்தாலுக்கான அழைப்பு விடப்பட்டிருந்தது.

இதேவேளை யாழ்.குடாநாட்டில் அமைதியான முறையில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதாக ஈ.பி.டி.பி அமைப்பு தெரிவித்துள்ளது. (ஏ)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.10.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.